47 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
SEINE FRANCE

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை கலாச்சார அரசியல் சமூக ஏடு

ஜூலை 1991



## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamileelamarchive.com

# உயிர்த்தெழுதல்

தமிழீழ ஆவணக் காப்பகம்

விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

விண்ணின் குண்டுகள்
வீழ்த்திய எங்கள்
மண்ணின் மரங்கள்
மறுபடி தழைத்தன!
நெடுங்கடக்கரையில்
நேற்றும் புலிகள்
சுடுங்குரல் கேட்டோம் ....
தோள் சிலிர்த்தது!

விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

தண்ணீர் விட்டோ
எரிமலை தணியும்?
விண்ணின் புயலை
வேலி தடுக்குமோ?
கடலைக் குடிக்க
நினைத்தவன் யாரடா?
அட! இங்கெம்மை
அழிக்கவும் கூடுமோ?

விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

கல்லறை களுக்கும்
உயிர் இங்குள்ளதால்
கொல்வார் கொலை வெறி
இங்கெடு படாது!
பந்தி பந்தியாய்
உயிர் அழியலாம்....
செந்தமிழ் ஈழம்
செத்து விடாது!

விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!



- கவிஞர் காசியானந்தன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**எரிமலை**

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பத்தாம் ஆண்டு

ஜூன் 1991

# தேசம் விடுதலையை நோக்கி...

கடந்த ஆறு மாத காலமாக, தமிழீழ மண்ணை முழுவதுமாக ஆக்கிரமித்து, தமிழ் மக்களை அடிமை கொள்ளும் திட்டத்தின் அடிப்படையில், சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டுவந்த, முப்படைகளின் பாரிய தாக்குதல் நடவடிக்கை தோல்வியைத் தழுவிவிட்டது. அத்துடன் பேச்சுவார்த்தை முறிவடைந்து, சிறீலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் மீண்டும் ஆரம்பமாகி, இவ்வருடம் யூன் 11 ம் திகதியுடன் ஓராண்டுகாலம் பூர்த்தியாகிவிட்டது. தலைவர் பிரபாகரனின் நேரடி வழிநடத்தல், விடுதலைப் புலிகளின் சிறந்த போர்த் தந்திரோபாயம், உத்திகள், வீரமும், தியாகமும் நிறைந்த எதிர்த்தாக்குதல்கள் ஆகியவையே வெற்றியை ஈட்டிக்கொடுத்துள்ளன. சிறீலங்கா அரசாங்கம் சமாதானத்தை வாயளவில் பேசிக்கொண்டு அடுத்தகட்ட யுத்த நடவடிக்கையை விரைவில் ஆரம்பிக்கும் என்பது நிச்சயம். இதனை எதிர்கொள்ள தமிழீழ மக்கள் இராணுவம் நவீனமயப்படுத்தப்படல் அவசியம். இதில் தரையில் இருந்து விண்நோக்கி ஏவப்படும் (SURFACE TO AIR MISSILES) ஏவுகணைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதன் கூடிய, தாக்கமான பிரயோகம் போரின் போக்கையே திசை மாற்றுவதோடு பூரண வெற்றியையும் விரைவுபடுத்திவிடும்.

இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளின் சமாதான அறைகூவல் முக்கியத்துவம் பெறுகின்றது. ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில், சில ஐரோப்பிய நாடுகள், இந்தியா ஆகியவற்றின் கூட்டான மத்தியஸ்தத்தின் கீழ், சிறீலங்கா அரசாங்கத்துடன் நேரடியான, வெளிப்படையான, எவ்வித முன்நிபந்தனையுமற்ற பேச்சுவார்த்தையை நடத்துவதற்கும், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வைக் காணுவதற்குமான விடுதலைப் புலிகளின் அழைப்பு, சமாதானத்தைக் கொண்டுவருவதில், அவர்களுக்குள்ள ஆர்வத்தை உலகளாவிய அளவில் வெளிப்படுத்தியுள்ளது.

சிறீலங்கா அரசின் இராணுவத் தீர்வுக்கான முயற்சி ஒருபோதும் வெற்றிபெறாதென்ற உண்மையை உணர்த்துவதும், சமாதானத் தீர்வுக்கான இன்னொரு சந்தர்ப்பத்தை அளிப்பதும், அது நிராகரிக்கப்படும் என்ற நிட்சயத்தில், சிறீலங்கா அரசின் சமாதான முகமூடியைக் கிழிப்பதும் அவ்வழைப்பின் சில நோக்கங்களாக அமைகின்றன. இனவாத அடக்குமுறையாளனுக்கு உதவி புரிவதன் மூலம், போரை விஸ்தரித்து, அழிவுகளை ஏற்படுத்தி, அகதிகளை உருவாக்குவதிலுள்ள ஆபத்தை உலக சமுதாயத்திற்கு, குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்குப் புரியவைத்து, தமது விடுதலைப் போராட்டத்திற்கு அங்கீகாரமும், உதவியும் கோரும் தார்ப்பரியமும் அங்கு அடங்கியுள்ளது.

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு.

எரிமலை
c/o C.C.T - France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கொக்கட்டிச்சோலைப் படுகொலை, சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு இராணுவ அதிகாரம் தமிழீழத்தில் இருந்து உடனே வெளியேற்றப்பட வேண்டும் என்ற அவசரத்தை உலக மட்டத்தில் உணர்த்தியுள்ளது. சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுத்துவருவதாக, இன அழிப்புப் போருக்கு சிறீலங்கா அரசாங்கம் கூறிவந்த அலங்காரப் பிரச்சாரம் பிசுபிசுத்துப் போய்விட்டது. சிறீலங்கா அரசு மனித குலத்திற்கே எதிரான சக்தியாக உலகின்முன் அம்மணமாக நிற்கின்றது.

கொழும்பில், அதிஉயர் பந்தோபஸ்துக்களைக் கொண்ட முப்படைக் கூட்டுத் தலைமையகத்தின் மீதான தாக்குதல், தலைநகரின் கேந்திரப் பகுதிகளுக்கும் போர் விஸ்தரிக்கப்பட்டுள்ளதையும், அரசாங்கம் பலவீனப்பட்டுவருவதையும் காட்டுவதாக உள்ளது. தனது சொந்த நாட்டின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளைப் பாதுகாத்தால் போதும் என்ற தற்காப்பு நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுவரும் சூசக சூழ்நிலையையும் இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ராஜீவின் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் மீதும் சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டும், இந்திரா காங்கிரஸ் ஆட்சி மத்தியிலும், அ.தி.மு.க, இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஆட்சி தமிழ் நாட்டிலும் ஏற்பட்டுள்ளதும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான போக்குகளை கைக்கொள்ள வழிவகுக்கும் என்று தீர்க்கதரிசனமற்ற, யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத சிலர் வாதாடுகின்றனர்.

இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் இந்தியா அதன் தற்போதைய நிலைப்பாட்டையே எப்போதும் கடைப்பிடிக்கும் என்று கருதுவது மிகவும் தவறானதாகும். இலங்கையின் ஐக்கியம் மற்றும் ஒருமைப்பாடு தொடர்பாக இந்திய அரசாங்கம் அடிக்கடி பிரகடனப் படுத்தும் கடப்பாடு தற்போதைய சூழ்நிலையிலே, சிறீலங்கா அரசாங்கத்திற்கு இருக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாகும்... ஆனால் எதிர்வரும் காலத்தில் இந்த நிலைப்பாடு மாறக்கூடும். அந்தவகையான மாற்றங்கள் ஏற்படுகின்ற தருணத்திலே, இந்தியா மேலதிகமாக எதையும் செய்யாமலேயே, நேரடியாக எதுவிதத்திலும் சம்பந்தப்படாமலேயே ஈழம் உருவாகிவிடும்" என்று முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. வெங்கடேஸ்வரன் கூறிய கூற்றை இங்கு நாம் கவனித்தல் வேண்டும். தமிழீழ மக்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்திய உபகண்ட மக்களின் பாரம்பரிய நண்பர்கள். அதுதவிர, சிறீலங்காவுக்கு ஊடாக இப்பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும், அமைதிக்கும், சுதந்திரத்துக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தவல்லனையும் சீனா போன்ற மேலாதிக்க சக்திகளை எதிர்கொள்ள, இந்திய அரசு ஆத்மார்த்தமாக விடுதலைப் புலிகளுடன் நல்லுறவை வளர்ப்பதும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, ஆதரவு வழங்குவதும் தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்குகளாய் இருக்கும்.

மக்கள் பக்கம்

## எழுந்து வா!

*ஆனி 12,
ஈழத்தை
ஓர் முறை
உறையவைத்தது.*

*கிழக்கில்
சூரியன் மீண்டும்
சிகப்பாய் உதித்தான்.*

*கொக்கட்டிச் சோலையில்
வெட்டிய தமிழரின்
கொட்டிய ரத்தத்தில்
தோய்ந்தெழுந்த சூரியன்
மீண்டும் சிகப்பாய் உதித்தான்.*

*இயற்கை
இளைப்பாறும் நேரம் - சிங்கள
இராணுவத்தின்
இயந்திரத் துப்பாக்கிகள்
கொக்கட்டிச் சோலையில்
குண்டுகளைக் கொப்பளித்துவிட்டு
அரசமரத்தின் கீழ்
அடைக்கலம் தேடிக்கொண்டன.*

*தவறுதலாக
நடந்துவிடவில்லை.
தமிழர் தலை கொய்ய,
திட்மிட்டு
கொழும்பெடுத்த முடிவு.*

*சிங்கள இராணுவக் காடையரால்
சிதைக்கப்பட்ட சிறுமிகளும்,
அடித்தே கொல்லப்பட்ட
உன் சகோதரனும்,
அரக்கனுக்கு இரையான
உன் சகோதரியும்,
பால் குடிக்கும்போது
பறித்து எறியப்பட்ட
மழலைகளும்...*

*எரியும்போது
எழுப்பிய ஈனக்குரல்
ஏன் உன் காதுகளை
எட்டவில்லை?*

*இங்கு
நீதி கேட்டு
நாம் நடத்திய வேள்வியில்
ஏன் நீ கலக்கவில்லை?*

*எழுந்து வா தமிழா!
ஏன் இந்தத் தயக்கம்?
எழுந்து வா!
நாம் நீதி கேட்போம்!
உலக சமூகத்திடம்
நாம் நீதி கேட்போம்.*

*- நிலாவெளி விக்கி -*

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்



# இன்ப அதிர்ச்சி

## நான்கு ஆண்டுகளின் பின்

## பொதுமேடையில் தலைவர் பிரபாகரன்



தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் நான்கு ஆண்டுகளின் பின் பொது மேடையில் திடீரென தோன்றி மக்களிற்கு இன்ப ஆச்சரியத்தை ஏற்படுத்தினார்.

1987 ம் ஆண்டு ஆவணி 5ம் திகதி, வரலாற்றுப் புகழ்மிக்க சுதுமலைப் பொதுக்கூட்டத்தில், மாபெரும் சனத்திரளுக்கு மத்தியில் தோன்றி உரையாற்றிய திரு. பிரபாகரன், நான்கு ஆண்டுகளின் பின்பு 10. 06. 91 இல் சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் திடீரெனத் தோன்றி மக்களை இன்பத்தில் ஆழ்த்திவிட்டார்.

சாவகச்சேரி, தபால் கந்தோர் வீதியில் அமைந்துள்ள இந்து மகளீர் கல்லூரித் திடலில், நாற்பதினாயிரம் மக்கள் திரண்டிருந்து முத்தமிழ் விழாவை ரசித்துக் கொண்டிருந்த வேளை, பலத்த ஆரவாரங்கள், வாழ்த்தொலிகள், கரகோஷங்களிற்கு மத்தியில் தலைவர் பிரபாகரன் மேடையை நோக்கி வந்தார். தலைவரின் வருகையை ஏற்கனவே அறிந்திருக்காத காரணத்தால், அங்கு திரண்டிருந்த மக்களுக்கு தலைவரின் வருகை இன்ப அதிர்ச்சியாகவே இருந்தது.

இச் செய்தி சொற்ப நேரத்திலேயே, அசுர வேகத்தில் சுற்று வட்டாரங்களுக்கும் பறந்து சென்றது. விளைவு, பெரும் திரளான மக்கள் அவசர அவசரமாக விழாத்திடலை முற்றுகையிட்டனர். தலைவரை நேரில் கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அந்த அரங்கில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது.

மக்கள் முண்டியடித்துக்கொண்டு தலைவரை நெருங்கி தமது அன்பைத் தெரிவிக்க எடுத்த முயற்சிகள், பாதுகாப்பு வழங்கிவந்த போராளிகளுக்கு மிகுந்த சிரமத்தையே கொடுத்தது. அதனைக் கட்டுப்படுத்துவதே அவர்களுக்கு பெரும்பாடாகப் போய்விட்டது. தமது அன்புக்கும், மதிப்புக்கும் உரியவரை நேரில் சந்தித்த ஆனந்தத்தில், பல பெண்கள், முதியோர் வாய்விட்டே அழுதுவிட்டனர். பல வதந்திகளுக்கு மத்தியில் தம்முன்னே தோன்றிய தலைவர் பிரபாகரனை கண்டமாத்திரத்திலேயே, அம் மக்களின் மத்தியில் பிரவாகமெடுத்த உணர்ச்சிக் கொந்தளிப்புகள் வார்த்தைகளில் விபரிக்க முடியாதவையாகவே இருக்கின்றன.

அங்கு மக்களின் ஆரவாரத்தின் மத்தியில் தலைவர் பிரபாகரன் உரையாற்றுகையில், "இந்தியப் படைகள் இங்கிருந்த காலம் முதல் என்னைப் பற்றிப் பொய்யான வதந்திகள் செய்திகளாகப் பரப்பப்பட்டு வருகின்றன. எமது இயக்கம் பற்றி மக்கள் நம்பிக்கை இழக்கக்கூடிய பொய்ப் பிரச்சாரம் திட்டமிட்டுக் கட்டவிழ்க்கப்பட்டது. அந்நிலை இன்னும் தொடர்கிறது."

"கடந்த காலங்களில் என்னைப் பற்றிய பல புரளிகளைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நான் உயிருடன் இல்லை என்றார்கள். எனக்குக் கடும் சுகயீனம் என்றார்கள். எனக்கும் மாத்தையாவிற்கும் இடையில் விரோதம், பகை என்றெல்லாம் சொன்னார்கள்."

"ஆனால் உங்கள் முன் நான் நிற்கிறேன். நான் உயிருடன்தான் இருக்கிறேன். எனக்கு நோயும் கிடையாது, படுகாயமும் இல்லை. என்னையும் மாத்தையாவையும் ஒன்றாக ஒரே மேடையில் காண்கிறீர்கள். இதிலிருந்தே எமக்கிடையே பிளவு என்று சொல்லப்படும் கதைகள் பற்றிய உண்மைகளை உணர்ந்திருப்பீர்கள்."

"இழந்த தமிழர் உரிமைகளை மீட்டெடுக்க தியாகத்தின் அடிப்படையில் கட்டி வளர்க்கப்பட்ட கட்டுக்கோப்பான இயக்கம். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும்வரை எமது போராட்டம் ஓயாது. கடந்த ஓராண்டு காலமாக சிங்கள ஆட்சியாளர்களுடன் நடந்துவரும் போராட்டத்தில் ஏராளமான உயிரிழப்புகள், பொருட் சேதங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனாலும் எங்கள் உறுதி குலையவில்லை. அதற்குக் காரணம் மக்களாகிய நீங்கள் காட்டிவரும் ஆதரவும் ஊக்கமும்தான்."

"இப்படியான போராட்ட காலங்களில் எமது கலை கலாச்சாரத்தைத் தொடர்ந்து பேணிப் பாதுகாப்புச் செய்தோர் பாராட்டுக்குரியவர்கள். ஆயுதப்போராட்டம் போல முக்கியத்தும் வாய்ந்தது நமது கலை, கலாச்சாரத்தைப் பாதுகாத்து வருவதாகும். இப்படியான நேரங்களில் கலை, எழுத்து மூலம் தமிழினத்துக்கு தொண்டாற்றி வருபவர்களின் சேவை போராளிகளின் அர்ப்பணிப்புப் போன்றது. எனவேதான் இவர்களில் முக்கியமானவர்கள் சிலரைக் கௌரவித்து விருது வழங்குகின்றோம். இந்த முத்தமிழ் விழாவை நடத்துகின்றோம்." என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியின்போது தமிழீழக் கலைஞர்கள் எட்டுப் பேருக்கு தலைவர் பிரபாகரன் தமிழீழ விருதும், பரிசுகளும் வழங்கிக் கௌரவித்தார். தலைவர் பிரபாகரனுடன், பிரதித் தலைவர் மாத்தையா உட்பட முக்கிய தலைவர்கள் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் முத்தமிழ் விழா கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றபின், தலைவர் பிரபாகரன் மக்களிடம் இருந்து விடைபெற்றுச் சென்றார் ●

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்



# "வன்னி விக்ரம"

ஸ்ரீ லங்கா அரசின் வடபகுதி மீதான 5வது முறையாக படையெடுப்பின் தோல்வி.

- இராணுவ ஆய்வு -




கடந்த வருடம் கார்த்திகை மாதம் இறுதிப் பகுதியில் நடந்த அரச, இராணுவ உயர்மட்ட இரகசிய கூட்டங்களில், வடக்கு, கிழக்கு பகுதிகள் மீதான படையெடுப்புக்கான திட்டம் தீட்டப்பட்டது. ஜனாதிபதி பிரேமதாசாவின் தலைமையில் கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா, வெளிவிவகார அமைச்சர் ஹரல் ஹேரத், அமைச்சு அதிகாரிகள், இரணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, மேலும் கடற்படை, ஆகாயப்படை தளபதிகளும், விசேட பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரி கருணசேனாவும் கலந்து கொண்டனர். புலிகளை முற்றாக அழித்து ஒழிப்பதென்றும், அதன் தலைவர் பிரபாகரனை உயிருடனோ, பிணமாகவோ கைப்பற்றுவது என்றும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட பகுதிகளை மீண்டும் கைப்பற்றி அரச அதிகாரத்தை, தமது சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் வெற்றி அவசியம் என்றும், அதன் மூலமே அரசாங்கம் தான் வகுத்துள்ள திட்டத்தின்படி வடக்கு கிழக்குப் பிரச்சனையைத் தீர்க்கலாம் என்றும் தீர்மானமாகியது. இந்த யுத்த நடவடிக்கையை முழுமையாகப் பொறுப்பெடுத்து நடத்தும் பொறுப்பு ரஞ்சன் விஜயரட்னாவிடம் கொடுக்கப்பட்டது. அவரது நேரடிக் கண்காணிப்பிலேயே வடகிழக்கின் இராணுவ, சிவில் நிர்வாக நடவடிக்கைகள் விடப்பட்டன. அத்திட்டத்தின் பிரகாரம், 91 தைமாதம் ஆரம்பமாகும் யுத்த நடவடிக்கை ஆனிமாதத்துள், புலிகளை முற்றாக அழிப்பதுடன் முடிவுபெற வேண்டும். சித்திரை மாதத்துள், கிழக்கு மாகாணமும், முல்லைத்தீவு,வவுனியா,-மன்னார்ப் பகுதிகளும் அரசகட்டுப்பாட்டுள் கொண்டுவரப்பட்டு, ஆனிமாதத்துள், யாழ்ப்பாணம் உட்பட வடக்குக்கிழக்குப் பகுதி முழுவதும் கைப்பற்றப் படவேண்டும். முப்படைகளின் ஒருங்கிணைந்த திட்டமாக இது வகுக்கப்பட்டது. சில இராணுவ நடவடிக்கைகள், உளவு அறிதல் போன்றவற்றிற்கு EPDP குழுவையும் பயன்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. பிரதான வடபகுதித் தாக்குதலுக்கு "வன்னி விக்கிரம" என்று பெயரிடப்பட்டது. கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கை முடிந்தபின்னர், கிழக்கு மாகாணத்தில் இருந்து STF விசேட அதிரடிப்படையினரையும், ஆயிரக்கணக்கான இராணுவத்தினரையும் வடக்கே அனுப்புவது எனவும் திட்டமிடப்பட்டது. இம்முழு நடவடிக்கையிலும் 20000 க்கு மேற்பட்டோர் உயிரிழந்தோ, காயமுற்றோ போகலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்தியாவிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்திய அரசாங்கம் எடுத்த நடவடிக்கை, விடுதலைப் புலிகளின் ஆயுத, வெடிமருந்து தளபாட விநியோகங்களை தடுத்துநிறுத்தி விடும் என்றும், இதுவே தக்க சூழ்நிலை என்றும் கருதப்பட்டது. இந்நடவடிக்கையின் போது, இந்தியா தலையிடாது இருக்கச் செய்வதுடன், இந்திய அரசின் ஆதரவையும் பெறமுயலவேண்டும் என்று முடிவாகியது. சமாதான பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ளுமாறு, சர்வதேச நாடுகளும், அமைப்புக்களும், ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும் வலியுறுத்தி வந்தன. சமாதானத் தீர்வையே தான் காணவிரும்புவதாகவும், அதனைப் புலிகள் விரும்பாது விடாப்பிடியாக இருப்பதாகவும், அவர்களைப் பேச்சுவார்த்தைக்கக் கொண்டுவரவே இந்த யுத்த நடவடிக்கையை எடுப்பதாகவும், அதன்பின்னர் சமாதானம்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சகஜநிலை, ஸ்திரத்தன்மை ஆகியவை வந்துவிடும் என்றும் கூறி, 6 மாதகால அவகாசம் தருமாறு சர்வதேச சமூகத்தைச் சமாளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில், சீனாவிடம் இருந்து ஜெற்விமானங்களும், இலகு டாங்கிகளும் வந்துவிடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. குண்டுவீச்சின் மூலமும், போர்நெருக்கடியின் மூலமும், பொருளாதாரத் தடையை இறுக்குவதன் மூலமும், வடக்குகிழக்கு மக்களை புலிகள்மீதும் போராட்டத்தின் மீதும் வெறுப்புக்கொள்ளச் செய்வதோடு, புலிகளுக்குத் தேவையான இராணுவத்தொடர்புடைய பொருட்களையும் கட்டுப்படுத்தி விடலாம் என்றும் அரசாங்கம் தீர்மானித்தது.

பாரிய ஆயுதங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையின், தொடக்க நிலையிலேயே தோல்விக்கான அறிகுறிகள் காணப்பட்டன. வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், விலைவாசி உயர்வு வாழ்க்கைப் பிரச்சனையினாலும் வேலைவாய்ப்புக்காக இராணுவத்தில் சேர்ந்துள்ள சிங்கள இளைஞர்களை, ஓர் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் மனப்பூர்வமான ஈடுபாட்டுடனும், இலட்சிய நோக்குடனும் போர்புரிய வைக்கமுடியவில்லை. அரசாங்கம், தனது பகுதிகளில் புரிந்த பல்லாயிரம் கொலைகளும், அரசாங்கம் கேளிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டு, தனது குறுகிய அரசியல் லாபங்களுக்காக போரை நடத்துகின்றது என சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டதும், சிங்கள மக்களைப் போருக்கு ஆதரவாக முழுமையாக அணிதிரட்ட முடியவில்லை. பொருளாதார நெருக்கடியிலும், மக்களின் எதிர்ப்பிலும் சிக்கியுள்ள அரசாங்கம், அவற்றிலிருந்து விடுபடவும், இராணுவ வெற்றி மூலம் தனது மக்களின் ஆதரவைப் பெறவும் போரையே நாடுகின்றது. ஆயினும் ஆக்கிரமிப்புப் போரில் ஒடுக்குமுறை அரசாங்கங்கள் வெற்றிபெறுவதில்லை, ஒடுக்கப்பட்ட மக்களே இறுதியில் வெற்றிபெறுவார்கள் என்பது சிறி லங்கா அரசாங்கத்தின் விடயத்திலும் சரியாகவே அமைகின்றது.

பொருளாதார சுதந்திரத்தை இழந்து, தனது மக்களையே காப்பாற்றிக்கொள்ள முடியாதிருக்கின்ற அரசாங்கம், பிற நாடுகளிடம் உதவியும், கடனும், ஆயுதங்களும், பயிற்சியும் பெற்று, பொருளாதார, ராஜதந்திர, சர்வதேச உறவுகளில் அந்நாடுகளிடம் அடிமைப்பட்ட நிலையில், தன்னாதிக்கத்திற்காகவும், புரட்சிகர சமுதாய மாற்றங்களுக்காகவும் போராடுகின்ற மக்களை அடக்க முடியாது என்பது, இந்த இராணுவ நடவடிக்கையிலும் நிதர்சனமாகியுள்ளது.

தென்தமிழீழத்தில், கரையோர நகர்ப்பகுதிகளில் இருந்து, கிராமப் புறங்கள், காட்டுப்புறங்கள் நோக்கி நகர்வதற்கு எடுத்த முயற்சிகள் படுதோல்வியிலும், இராணுவ உயிரிழப்பிலும் முடிந்தன. படுவான்கரையில், பொலிஸ் அதிரடிப்படையினர் தேடுதல், அழித்தல், புலிகளின் பாசறைகள், பயிற்சிமுகாம்களைப் பிடித்தல் என்ற நோக்கங்களுடன் இறங்கினராயினும் மறைந்திருந்து திடீரெனத் தாக்கும் விடுதலைப் புலிகளின் அதிரடிகளுக்கு இலக்காகியும், கண்ணிவெடிகளில் சிக்கியும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டனர். இத்தோல்விகளுக்கு பழிவாங்க, அப்பாவிப் பொது மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். நூற்றுக்கணக்கானோர் இக்காலத்தில் கடத்தப்பட்டு காணாமற் போயினர். பலரின் சடலங்கள் ரயர் போட்டு வீதியோரங்களில் எரிக்கப்பட்டன. இத்தகைய கொலைகளுக்கு கிழக்கு மாகாணத்துக்கு இராணுவப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா காரணமாக இருந்தார்.

ரெலோ . புளொட் குண்டர்களும் "கருநாகம்" என்ற பெயரில் இக்கொலைகளுக்கு உடந்தையாக இருந்து செயற்பட்டனர். கரையோர நகர்ப் பகுதிகளில் கூட, இரவு வேளைகளில் இராணுவத்தினர் முகாம்களுக்குள் பதுங்கிக் கொள்ள விடுதலைப் புலிகளின் நடமாட்டமே காணப்படுவதாக வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒரவர் நேரில் கண்டு தெரிவித்துள்ளார். திருகோணமலை மாவட்டத்து அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ரூபன் கூறுவது போல், சூழ்நிலைக்கும், சந்தர்ப்பத்திற்கும் உரிய முறையில் தமது உத்திகளை மாற்றி, மாற்றிப் போரிடுவதால், விடுதலைப் புலிகளுக்கு அங்கு சண்டையில் வெற்றி கிட்டுகின்றது. பல்வேறு சமூகங்களும், நூற்றுக்கணக்கான ஆயுதப்படை முகாம்களும் உள்ள தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளால் போராட முடிகின்றது. சிங்கள எல்லைப் புறங்களுக்கும் சென்று தாக்குதல்களை நடத்தவும், குடியேற்றங்களை தடுத்து நிறுத்தவும் முடிகின்றது.

வவுனியாவில், 9000 படையினர் குவிக்கப்பட்டனர். வவுனியாவிலிருந்து மன்னார் வீதியினூடாகவும், யாழ்ப்பாணம் வீதியினூடாகவும் படையினரை முன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



னோக்கி நகர்த்துதலே அரச படைகளின் நோக்கமாக இருந்தது. இப்படையெடுப்புக்கு மேஜர் ஜெனரல் கொப்பேக்கடுவ தலைமை வகித்தார். வவுனியா, அனுராதபுரம் விமானப்படைத் தளங்களிலிருந்து புறப்பட்ட ஹெலிகொப்டர்களும், குண்டுவீச்சு விமானங்களும் படையினருக்கு உதவுவதாக, வன்னி, மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் குண்டுகளை வீசித் தாக்கின. பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டு, பெரும் பொருட்சேதங்கள் ஏற்பட்டதே தவிர ஆகாயப்படையினால், தரைப்படையினரின் நகர்வுக்கு உதவமுடியவில்லை. MSF என்ற பிரெஞ்சு வைத்திய குழுவினரின் வாகனம் மீது வெற்றிகரமான தாக்குதல் நடத்தி, மனிதாபிமான சேவை புரிந்த வைத்தியரையும், தாதிமார் இருவரில் ஒருவரையும், சாரதியையும் காயப்படுத்தியதே ஆகாயப்படையின் சாதனையாகும். ஈரப்பெரியகுளத்தில் தங்கியிருந்து கூலிக்கு சேவகம் புரியும் புளொட் கும்பலைச் சேர்ந்த சிலரும் இராணுவத்துடன் கூடப்புறப்பட்டனர். உளவு அறியவும் சிலர் வடபகுதிக்கு அனுப்பப்பட்டனர். பங்குனி, சித்திரை, வைகாசி முற்பகுதியில் சண்டைகள் தீவிரமாக இடம்பெற்றன. எண்ணிக்கை மிகுந்த இராணுவ பலத்துடனும், ஆயுத பலத்துடனும், ஆகாயப்படை உதவியுடனும், கனரக, கவச வாகனங்கள் சகிதம் வடபகுதியை ஆக்கிரமிக்கும் படையெடுப்பு முயற்சி, விடுதலைப்புலிகளின் வீரம் செறிந்த தாக்குதல்களால் முறியடிக்கப்பட்டது.

வீரர்களுக்கான மருத்துவ வசதிகள் துரித கதியில் இடம்பெற்றன. பெண்கள் அணிகளும் பலபோர் முனைகளில் தனித்துவமாக இயங்கிச் செயல்பட்டன. ஸ்ரீ லங்கா இராணுவத்தை தடுத்து நிறுத்தி, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் சுதந்திரத்தை நிலைநாட்டும் இப்போரில் பல விடுதலை வீரர்கள் வீரமரணத்தை தழுவிக்கொண்டனர். லெப். கேர்ணல் கிறேஸி, கப்டன். செங்கதிர் போன்றோரோடு 250 விடுதலைப் புலிகள் தாயக மீட்புக்காக உயிர் துறந்தனர். பிரதான இராணுவப் படையெடுப்பை தடுக்கும் போர் நடவடிக்கையோடு, மன்னாரில் தள்ளாடி, சிலாபத்துறை ஆகிய முகாம்களிலிருந்து புறப்பட்டு முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் மோதல்கள், மாந்தை, நானாட்டான், முசலி ஆகிய இடங்களில் ஏற்பட்டன. இராணுவத்தினர் பின்நோக்கித் தள்ளப்பட்டனர். தற்காப்பு போர் நடைபெற்ற அதேவேளை, தாக்குதல் நடவடிக்கைகளையும் ஆனையிறவு இராணுவ முகாம், காரைநகர் கடற்படைத்தளம் ஆகியவற்றின் மீது மேற்கொண்டு பாரிய சேதங்களை இராணுவத்தினருக்கு ஏற்படுத்தியதோடு, அந்தப் படைத்தளங்கள் வீழ்ச்சியுறுகின்ற சூழ்நிலையையும் தோற்றுவித்தனர். விடுதலைப் புலிகள், தற்காப்பு நிலையிலிருந்து தாக்குதல் முன்னெடுப்புக்களை செய்யும் கட்டத்திற்கு முன்னேறிச் செல்லும் சமபல நிலையாக இதனைக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டு, பெரும் பொருட்சேதங்கள் ஏற்பட்டதே தவிர ஆகாயப்படையினால், தரைப்படையினரின் நகர்வுக்கு உதவமுடியவில்லை. MSF என்ற பிரெஞ்சு வைத்திய குழுவினரின் வாகனம் மீது வெற்றிகரமான தாக்குதல் நடத்தி, மனிதாபிமான சேவை புரிந்த வைத்தியரையும், தாதிமார் இருவரில் ஒருவரையும், சாரதியையும் காயப்படுத்தியதே ஆகாயப் படையின் சாதனையாகும்.

விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமான நிலப்பகுதிக்குள் இராணுவத்தினரை நுழையவிட்டு சுற்றிவளைத்துத் தாக்கி அழிக்கும் தந்திரத்தைக் கையாண்டனர். இதனால் இராணுவத்தினருக்கு பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. விடுதலைப் புலிகளின் விசேட அதிரடிப்படையான "சிறுத்தைப் படைப்பிரிவு", மேஜர் சொர்ணத்தின் தலைமையில் வன்னிப் பகுதிக்கு அனுப்பப்பட்டது. விடுதலைப் புலிகளின் எல்லைப்புறக் காவற்படைப் பிரிவும் சண்டைகளில் ஈடுபட்டது.

தலைவர் பிரபாகரன் வன்னிச் சண்டையில் நேரடியாகக் கலந்து கொண்டார். மன்னார், வவுனியா ஆகிய இரு போர்முனைகளிலும் அவரது செயற்பாடு காணப்பட்டது. குறிப்பிட்ட அக்காலப் பகுதியில், தலைவர் பிரபாகரனின் பிரதான தளமே, சண்டைப் பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. போராளிகள் மத்தியில் தலைவரின் இருப்பு, போராளிகள் மத்தியில் கரைகடந்த உற்சாகத்தை ஏற்படுத்தியிருந்தது. காயமடைந்த

ஆயுதப்படையினர் மன்னார் வீதியில் சில கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள பூவரசங்குளம் வரையிலும், யாழ்ப்பாணம் நோக்கி தாண்டிக்குளம், நொச்சிமோட்டை வரையுமே முன்னேற முடிந்தது. அவர்களை பின்னடைய செய்வதற்கான தாக்குதல்கள் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவத் தரப்பில் மன்னார் போர்முனையில், 500 பேர் வரையும், வவுனியாப் போர்முனையில் 200 பேர் வரையும் கொல்லப்பட்டோ இனிமேல் போரிடமுடியாத அளவிற்கு அங்கவீனர்களாக ஆக்கப்பட்டோ உள்ளனர். 18.5.91 அன்று போர் நடவடிக்கையை நிறுத்திக்கொண்ட அரசாங்கம் தனது உயர்மட்டக் குழுவைக் கூட்டி தோல்வியை ஆராய்ந்தது. தாயகப் பகுதியின் பெரும் பகுதிகளை மீட்டு, அதனைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், போராட்ட இலட்சியப் பாதையில் மிக முக்கிய திருப்பு முனையாகும். அப்பகுதிகளை அரசாங்கத்தின் பெரும்படையெடுப்புகளிலிருந்து பாதுகாத்து தமது சிவில் நிர்வாகத்தை நிலை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நாட்டல், புதிய தமிழீழ அரசின் உருவாக்கத்தில் பிரதானமான மைல் கல்லாகும். அப்படியொரு நிகழ்வே இப்போரின் போது நடந்துள்ளது. 1985 ம் ஆண்டில் வடக்கில் 26 இராணுவ முகாம்களும், 4 கடற்படைத் தளங்களும், 23 (STF) கொமாண்டோ பொலிஸ் முகாம்களும், 2 ஆகாயப்படைத் தளங்களும் இருந்தன. தற்போது 6 இராணுவ முகாம்கள், ஒரு கடற்படைத்தளம், 2 ஆகாயப்படைத் தளம் உள்ளன. ஒரு கொமாண்டோ பொலிஸ் முகாம் கூட இல்லை. இது குறிப்பிடத்தக்க மாற்ற நிலையாகும்.

இக்கால கட்டத்தில் இராணுவ, அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளைச் சமாளித்து, சிவில் நிர்வாகத்தை திறம்பட ஆற்றி, மக்களின் துன்பச் சுமைகளை குறைப்பதற்கென்று தலைவர் பிரபாகரனின் தலைமையில் நிழல் மந்திரிசபை அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆக்கிரமிப்பு தடுத்து நிறுத்தப்பட்டதோடு இந்நிலை, எதிர்ப்புறமாக முடுக்கிவிடப் படவேண்டும். அதாவது, அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புப் படையெடுப்பு, தமிழீழ மக்கள் இராணுவத்தின் விடுதலைப் படையெடுப்பாக முன்னெடுக்கப்படவேண்டும். தமிழீழப் பகுதிகளில் உள்ள ஆயுதப்படை முகாம்கள் அகற்றப்படுவதோடு, தாயக பூமி முழுவதும் விடுவிக்கப்பட்டு, எல்லைகள் எமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்படுவதோடு சுங்க நிலைகளும் அமைக்கப்பட வேண்டும்.

ஸ்ரீ லங்கா அரசாங்கம் தனது தோல்வியை ஒப்புக் கொள்ளாது. இன்னொரு 6 மாத காலத் திட்டத்துடன் அடுத்த படையெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்துவருகின்றது. அதேவேளை, சமாதானம், பேச்சுவார்த்தை என்ற பசப்பு வார்த்தைகளையும் கூறிவருகின்றது. சர்வதேச சமூகம், ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு காணும் முயற்சியை இனி மேலும் பொறுத்துக்கொண்டிருக்காது என்றே நம்புவோம். காரணம், தமிழீழ மக்களின் விடுதலை உணர்வையும், அவர்களது அபிலாசைகளையும், ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் கொடூர ஒடுக்குமுறையையும், தமிழ்த் தேசியப் பிரச்சனையை சமாதான முறையில் தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு விருப்பமோ, எவ்வித திட்டமோ இல்லையென்பதையும் சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டுள்ளது. எனவே உண்மையான சமாதானமும், நிரந்தரத் தீர்வும் ஏற்பட வேண்டுமெனில், அது அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையால் அல்ல, தமிழீழ மக்களின் அடிப்படை தேசிய சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதன் மூலமே சாத்தியமாகும் என்பதை சர்வதேச சமூகம் உணரத் தொடங்கியுள்ளது. சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மீது அரசாங்கம் புரிந்த வெறிச் செயல்களே ஸ்ரீ லங்கா அரசின் சுயரூபத்தை உலக அரங்கில் வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலையில், சர்வதேச சமூகத்தின் ஆதரவை எமது விடுதலைப் போராட்டத்திற்கு திரட்டும் பொருட்டும், தமிழீழப் பகுதிகளை விடுவிக்கும் பொருட்டும் பொருளாதாரத் தன்நிறைவை காணும் பொருட்டும் தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமும், வரலாற்றுக் கடனும் ஆகின்றது •

1985 ம் ஆண்டில் வடக்கில் 26 இராணுவ முகாம்களும், 4 கடற்படைத் தளங்களும், 23 (STF) கொமாண்டோ பொலிஸ் முகாம்களும், 2 ஆகாயப் படைத் தளங்களும் இருந்தன. தற்போது 6 இராணுவ முகாம்கள், ஒரு கடற்படைத்தளம், 2 ஆகாயப்படைத்தளம் உள்ளன. ஒரு கொமாண்டோ பொலிஸ் முகாம்கூட இல்லை.

## கேள்வி - பதில்

எரிமலையில் இடம்பெறும் கேள்வி - பதில் பகுதி, சில தவிர்க்க முடியாத காரணங்களினால், இவ்விதழில் இடம்பெறவில்லை. அப்பகுதி அடுத்த இதழில் வழமை போல் இடம்பெறும்.

- ஆசிரியர் குழு -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



**விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக்கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக் கட்டுரையில் இருந்து.....**

"எம்மோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயமே கொழும்பில் வைத்து முஸ்லீம் இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கியது சிறிலங்கா அரசு. கட்டாயமாக இளைஞர்களைப் பிடித்து ரி.என்.ஏ. ஆயுதப்பயிற்சிகளை வழங்கிய போது தமிழ் இளைஞர்களைப் போலவே முஸ்லீம் இளைஞர்களும் கொழும்புக்கு ஓடினார்கள். அவர்களுடன் சில முஸ்லீம் தலைமைகள் தொடர்பு கொண்டு 'எதிர் காலத்தில் ஆயுதப்படைகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்' என்று உறுதிமொழிகளைக்கொடுத்து சிறிலங்கா அரசிடம் ஆயுதப்பயிற்சி எடுக்க வைத்தார்கள். எமக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்ததை கருத்தில் கொண்டு ஏதோ ஒரு நம்பிக்கையில் அவர்களும் ஆயுதப்பயிற்சி எடுத்தனர்." என்றார் கருணா.

"இயக்கத்துக்குள் வேண்டுமென்றே ஊடுருவினர் முஸ்லீம் இளைஞர்கள் என்று கூறினீர்களே, இவர்களை ஏன் உங்களால் இனம் காண முடியவில்லை?" என்று கேட்டேன். "முஸ்லீம்கள் விடயத்தில் மிகவும் விட்டுக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எமது நடைமுறையினால் சில விடயங்களில் நாம் நெகிழ்ச்சிப்போக்கை கடைப்பிடித்தோம்." என்றார். "என்ன அது?" என்றேன். "ஜிகாத் போன்ற அமைப்பில் இருப்பவர்கள் மீது நாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அவர்கள் பலரின் அழிவுக்குக் காரணமாக இருந்தவர்கள். ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக இதை முஸ்லீம் மக்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்பினோம். 17 சதவீதமான முஸ்லீம்களுக்கு வடக்கு கிழக்கு அனைத்திலும் 30 சதவீதமான சலுகைகளை வழங்க ஒப்புக்கொண்டோம். ஆனால் எமது பெருந்தன்மைகளை எல்லாம் எமது பலவீனங்கள் என்று முஸ்லீம் தலைமைகள் தப்புக்கணக்கு போட்டுவிட்டன. தாம் தமிழர்களை என்ன செய்தாலும் தங்கள் மீது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கடுமையாக நடந்துகொள்ள ஒருபோதும் இயக்கம் முன்வராது என்று நம்பினர். ஆனால் இது தப்புக்கணக்கு என்பதை அவர்களுக்கு நிரூபிக்கவேண்டிய கட்டம் வந்துவிட்டது என்று கருதுகிறேன்." என்றார்.

"நல்லெண்ண நடவடிக்கையாக வேறு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள்?" என்று கேட்டேன். "மட்டக்களப்பு - அம்பாறை பகுதிகள் இனஉறவில் திடீரென பதட்ட நிலை தோன்றக்கூடிய இடங்களாதலால் முஸ்லீம் வர்தகர்களிடம் வரி அறவிடவில்லை. தமிழ் வர்த்தகர்களிடம் வாங்கும் வரிகள் முஸ்லீம் வர்த்தகர்களிடம் வாங்காததால் அவர்களால் குறைந்த விலையில் பொருட்களை விற்க முடிந்தது. அதனால் அவர்களின் வியாபாரங்கள் மட்டுமே விருத்தியடைந்தன. தமிழ் வர்த்தகர்களின் அபிவிருத்தியைப் பொருட்படுத்தாமல் இவ்வாறு நடந்துகொண்டோம்." என்றார்.

"ஆம், எனக்கும் ஞாபகம் வருகிறது. 85 ம் ஆண்டு தமிழ் முஸ்லீம் கலவரத்தின் போது விடுதலைப்புலிகள் இயக்கம் முஸ்லீம் மக்களுக்குச் சார்பாக மட்டுமே நடக்கிறது என்று நாவற்குடா, மஞ்சத்தொடுவாய் பகுதிகளில் ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது. அந்தளவுக்கு விட்டுக்கொடுப்புகள் நடைபெற்றது தான்." என்றேன்.

அதற்கு அவர் "விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பில் (சோல்ட்) கூட ஒரு முஸ்லீம் இளைஞன்தான் மிகவும் பொறுப்பான பதவியில் அமர்த்தப்பட்டான். அவன்தான் இன்று மாணவர்களை அடையாளம் காட்டுகிறான். இப்பொழுது மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லமுடியாது. அனைவரும் அவனுக்குப் பயப்படுகிறார்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கள்." என்றார். தொடர்ந்து "இதற்கு முன் நடந்த கலவரங்கள் எல்லாம் சிறீலங்கா அரசினால் தூண்டி விடப்பட்டவை. அப்போதும் பிரச்சனையானவர்கள், பிரச்சனையை தூண்டிவிடுபவர்கள் இருந்தார்கள் தான். அவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். ஆனபடியால் இனஐக்கியத்தை விரும்புவர்களின் துணையோடு நாம் ஒவ்வொரு பிரச்சனையையும் அணுகிவந்தோம். இந்தமுறை சிறீலங்கா அரசுடன் மதஉணர்வைத் தூண்டிவிடும் சக்திகளின் பங்களிப்பு பெருமளவில் இருந்தது" என்றார். "அந்த சக்திகள் எந்த நம்பிக்கையில் இவ்வாறு நடந்துகொண்டன?" என்று கேட்டேன். "இந்த சக்திகளின் பின்னால் சிறீலங்காவின் நட்பு நாடான ஒரு முஸ்லீம் நாடு இருக்கின்றது" என்றார். "அதைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டேன். சொன்னார். "தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு சர்வதேச பிரச்சனையாகி விட்டது. இஸ்ரேல், இந்தியா, சீனா, பாகிஸ்தான், இத்தாலி என்பவற்றுடன் இந்த நாடும் இணைந்துகொண்டு விட்டதா? சீனா, இத்தாலி என்பன ஆயுதவிற்பனை, விமான விற்பனையுடன் மட்டும் நின்றுவிட்டன. இஸ்ரவேல், பாகிஸ்தான் இராணுவப் பயிற்சியை வழங்கின. இந்தியா நேரடியாகவே தலையிட்டது, இப்போது இந்த நாடும்.... எல்லோரும் ஏறின குதிரையில் சக்கடத்தார் ஏறி... என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. "அஷ்ரப் பற்றி சொல்லவில்லையே?" என்றேன். "அஷ்ரப்தான் இந்த விடயத்தில் முக்கியமானவர். அத்துடன் ஏதோ செய்து, அது யாருடைய அழிவாக இருந்தாலும் பரவாயில்லை, தானே முஸ்லீம் மக்களின் தலைவன் என்ற நிலை வந்தால் போதும் என்றெண்ணி துவேஷ உணர்வுகளைப் பரப்பி தமிழரின் அழிவுக்கு கணிசமான பங்காளியாகின்றார்" என்றார் கருணா.

கருணா அந்த முஸ்லீம் நாட்டின் பெயரைச் சொன்னதும் திருகோணமலை எழுத்தாளர் தமிழ்ப் புதல்வனின் கவிதை ஞாபகத்துக்கு வந்தது.

"தமிழனின்
தலைவிதி
கொழும்பிலே
சிங்களத்தினாலும்
டில்லியிலே
ஹிந்தியினாலும்
எழுதப்படுகிறவரை
இந்த -
கண்ணிவெடிகளும்
இந்த
மரணங்களும்
தொடர்கதைதான்..."

இக்கவிதையில் ஹிந்தியானாலும் என்பதற்கு அடுத்தபடியாக.... அரபுவினாலும் என்று சேர்க்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

(தொடரும்)

## உபதேசம்

புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும் ( கொக்கட்டிச் சோலை சம்பவம்)
புலிகள் பாசிசப் போக்குடையவர்கள். பேச்சுவார்த்தைக்கு முன்வராதவர்கள். ஆனால் அரசோ மக்களைப் பாதுகாக்க வேண்டியது. பாதுகாப்புப் படையினரும் மக்களை காக்க வேண்டியவர்கள்.
E.P.R.L.F சுரேஸ் பிரேமச்சந்திரன்.(வீரகேசரி23.06.91)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ராஜீவ் மரணம்




## ஏன் ? எப்படி ?

*1991 வைகாசி 21 ம் நாள், சென்னையிலிருந்து 24 மைல் தொலைவிலுள்ள ஸ்ரீ பெரும்புத்தூர் என்ற வைணவதலம். தமிழ்நாட்டில், இந்திராகங்கிரஸின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத் திற்காக வந்த முன்னாள் பிரதமரும், இந்திரா காங்கிரஸ் கட்சி யின் தலைவருமான ராஜீவ்காந்தி குண்டுவெடிப்பினால் அங்கு கொல்லப்பட்டார். அவர் எதிர்காலப் பிரதமராகவும் வருணிக்கப் பட்டிருந்தார்.*

இரவு 10 மணியளவில் கூட்டமேடையை நோக்கி ராஜீவ் செல்லும் பாதையில் மாலைகள், பூச்செண்டு களை ஆதரவாளர்களிடமிருந்து பெறும்பொழுதே பட்டாசுவெடிகளுடன் சேர்ந்து அதிர்ச்சி தரும் குண் டுவெடிப்பு ஏற்பட்டது. அவருடன் மேலும் 15 பேர் இறந்துபோயினர். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான வாழப்பாடி ராமமூர்த்தி, கருப்பையா மூப்பனார் ஆகியோர் ஆச்சரியப்படத்தக்க வகையில் அவ்வே ளையில் அவ்விடத்தில் இருக்கவில்லை. சந்தனமா லையுடன் காணப்பட்ட ஒரு பெண்ணே தற்கொலைச் செயலாக ராஜீவின் காலைவணங்கும் பாவனையில் தனது உடலோடு அணைத்துக் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்ததாக கூறப்படுகின்றது. அதற்கு பயன்படுத்தப்பட்ட வெடிமருந்து, இராணுவத்தினர் பயன்படுத்தும் RDX எனப்படும் பிளாஸ்ரிக் வெடிமருந் தென ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். குண்டுவெடிப்பில் இறந்துபோன ஹரிபாபு என்னும் புகைப்படக்காரரின் புகைப்படக் கருவியிலிருந்து எடுக்கப்பட்ட படத்தில் சந்தனமாலையுடன் காணப் படும் பஞ்சாபி உடை அணிந்த பெண்குறித்தும், அவர் அருகில் வடநாட்டு உடையில் காணப்படும் ஆண் தொடர்பாகவும் இந்திய மத்திய புலனாய்வுப் பிரி வான C.B.I, விஜய்கரன் என்னும் உயரதிகாரியின் தலைமையில் முழுமையான விசாரணைகளை முடுக் கிவிட்டுள்ளது. இக்குண்டு வெடிப்பில் கையாளப் பட்ட மிக நுணுக்கமான தொழில்நுட்பம், ராஜீவ் காந்தியின் ஆட்சியின்போது, இந்திய அமைதிகாக்கும் படை விடுதலைப் புலிகளுடனான போரில், தமிழீழப் பொதுமக்களுக்கு இழைத்த கொடுமைகள் (பல்லா யிரக்கணக்கான தமிழீழ மக்கள் கொலை செய்யப்பட் டதும், ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் கற்பழிக்கப் பட்டதுமான பல கொடுமைகள்.) அண்மையில் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளைச் சிறைப்பிடித்து, அங்கு விடுதலைப் புலிகள் இயங்க முடியாமல் செய் ததற்கு ராஜீவ் காந்தி முதன்மையான காரணகர்த் தாவாக இருந்தமை, விடுதலைப் புலிகளின் அணியில் பெண்பிரிவினர் உள்ளமை, இக் கொலை மூலம் இந்திய அரசியல்வாதிகள் குறுகிய அரசியல் லாபம் பெறும் முயற்சி ஆகியவை காரணமாக விடுதலைப் புலிகள் மீது பலர் சந்தேகம் தெரிவிக்க வாய்ப்பேற் பட்டது. அதேவேளை பஞ்சாப் தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் ராஜீவ் காந்தியே முன்னிலை யில் இருந்தார் என்பதையும் எவரும் மறுப்பதற் கில்லை. மீண்டும் பதவிக்குவரும் ராஜீவ் காந்தி, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள, தமக்குப் பாதகமான அம்சங்களை மீண்டும் வலியுறுத்தலாம், திட்டமிட்ட இக்கொலையினைச் செய்து, அதன் பழியை விடுதலைப் புலிகளின் தலையின் மீது போட்டு, இந்திய மத்திய அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரந்தமான பகையை உரு வாக்கி, அதனால் ஆதாயம் பெறலாம் என்ற கார ணங்களுக்காக, இக்கொலையை சிறீலங்கா அரசாங் கம் செய்திருக்கமுடியும் என்பதும் நியாயமான சந் தேகமே.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் பிரதிநிதியாக, விடுதலைப் புலிகள் மக்கள் முன்ன ணியின் உயர் அரசியற்குழு உறுப்பினரான கவிஞர் காசி ஆனந்தன் பங்குனி 5ம் திகதி ராஜீவ் காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடியது முக்கிய நிகழ்ச்சியாகும். இந்தியாவிற்கு எதிராக எப்போதும் தாம் செயல்பட்டதில்லை என்றும், தாம் எப்போதும் இந்தியாவின் பக்கமே என்றும், இந்தியாவும் தமிழர் கள் சார்பாக இருக்கவேண்டும் எனவும் காசி ஆனந் தன் அவ் உரையாடலின்போது கேட்டிருந்தது குறிப் பிடத்தக்கது. ஆட்சிக்கு வரவிருக்கும் கட்சியோடும், அதன் தலைவரோடும் நேச உறவுகளை வளர்த்துக் கொள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் மனப் பூர்வமான முயற்சிகளை எடுத்திருந்தது இதிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




இச்சம்பவம் ஏன் தமிழ் நாட்டில், தேர்தல் காலத்தில் இடம் பெற வேண்டும்? இந்திய மத்திய அரசின் ஆதிக்கம் தமிழ்நாட்டு மாநில அரசின் மீது, அப்பட்டமாக வெளிப்பட்டதாக தமிழ்த் தேசிய வாதிகளால் உணரப்பட்டதா? தமிழ்நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசாங்கம், தகுந்த காரணங்கள் எதுவுமின்றி, தாம் நினைத்த போக்கில், ராஜீவின் தூண்டுதலின் பேரில் கலைக்கப்பட்டதானது, அவர்களுக்கு ஆத்திரத்தை விளைவித்ததா? விரும்பிய வேளை தனிநபர் ஒருவரால் மக்கள் தீர்ப்பினை மாற்றமுடியுமென்றால், தேர்தல் எதற்கு, பிரச்சாரம் எதற்கு எனக் கருதப்பட்டதா? இந்திய வடபுலத்தில், பாரதீய ஜனதாக் கட்சியால் வளர்க்கப்பட்டுவரும் ஆரிய ஆதிக்கக் கொள்கையின், மென்மையான இன்னொரு வடிவமாக இந்திரா காங்கிரஸ் மாற்றம் பெறுவதாகவும், அன்பான இராம ராஜனாக ராஜீவ் காந்தி தோற்றமெடுப்பதாகவும் அவர்கள் கண்டார்களா? சமகால அரசியல் நிலைகளின் பொய்மைகள், போலித்தனங்கள், குழறுபடிகள் ஒருபுறம் இருக்க, தமிழ் நாட்டின் சுபீட்சமான எதிர்காலம் சரியான பாதையில் இட்டுச் செல்லப்படவேண்டும் என்ற தீர்க்க தரிசனத்துடன் அவர்கள் செயல்ப்பட்டார்களா?

ராஜீவ் காந்தியின் மரணம், உலகில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. பிராந்திய, இந்திய உபகண்ட அரசியலில் திருப்பு முனையான மாற்றங்களைக் கொண்டுவரவல்ல நில நடுக்கமாக உள்ளது. நேரு பரம்பரையின் தொடர்ச்சியான ஆட்சி இடை நிறுத்தப்பட்டுள்ளது. சரிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்திரா காங்கிரஸ் கட்சியை பிணைத்துக்கட்டிய சங்கிலிக் கோர்வையாக விளங்கிய பரம்பரை ஆட்சி அறுந்தவுடன், கட்சி சிதறுண்டு போய் விடுமோ என்றும், வீழ்ச்சியை அடைந்து விடுமோ என்றும் அச்சம் தோன்றியுள்ளது. பரம்பரை ஆட்சியின் இடைநிறுத்தம், நீண்டகால அடிப்படையில், நல்ல தலைமைகளைக் கொண்டுவரும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. இந்திரா காங்கிரஸின் இடத்தை நிரப்ப, பாரதீய ஜனதாக் கட்சி இந்துத்துவ சுலோகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அண்மையான எதிர்காலத்தில், சாதி, சமய, பிரதேச, இனப் பிரிவினைகளினாலும், ஊழல், மந்தநிலை, ஏழ்மை, வேலையில்லாப் பிரச்சனை, படிப்பறிவுக் குறைவு ஆகியவற்றாலும் நலிவடைந்து வரும் இந்தியா, உள்நாட்டு, வெளிநாட்டு ஆபத்துக்களால் சிதறுண்டு, சீரழிந்து போகாமல் காப்பதற்காக இந்து சாம்ராஜ்ஜியம் என்ற மத அடிப்படையிலான கொள்கை முன்வைக்கப்படுகின்றது. கட்டுக்கோப்பான, உறுதியான ஸ்திர நிலைக்கு இது உத்தரவாதம் என்ற கோஷத்தை பெரும்பாலான மக்களும் நம்பத் தொடங்கியுள்ளனர். கட்டுப்பாடு அற்ற, சந்தைச் சக்திகளின் அடிப்படையிலான, வெளிநாட்டுப் பொருட்களுக்கும், மூலதனத்திற்கும் வரவேற்பளிக்கின்ற பொருளாதாரக் கொள்கையின் காரணமாக மேற்குலகமும், இதுவரை காலமும் இந்திரா காங்கிரஸிற்கு கொடுத்துவந்த ஆதரவை பாரதீய ஜனதாக் கட்சிக்கு மாற்றும் சூழ்நிலை தோன்றியுள்ளது. பாரதீய ஜனதாக்கட்சியின் வளர்ச்சி தேசிய இனங்களுக்கும், மதசார்பின்மைக்கும் எதிரான போக்காக அமையும். ஏழை உழைக்கும் மக்களையும், சுரண்டலுக்கு உட்படுத்தும் இக்கொள்கை, தமிழ்நாட்டு மக்கள் மீதும் அழுத்தத்தையும், ஆதிக்கத்தையும் பிரயோகம் செய்யும். காரணம் இந்துத்துவம் என்ற போர்வையில் ஆரிய ஆதிக்கமே அரசோச்சப் போகின்றது. தேசிய இனம் என்ற அடிப்படையில் தமிழீழ மக்களையும் இது பாதிக்கும். வளர்ந்து வரும் இக்கொள்கை ராஜீவின் மரணத்தின் பின்பு வெளிப்படையாக நடைமுறைப் படுத்தப்படப் போகும் இக்கொள்கை, உறுதியான, ஒற்றுமையான, ஆன்மீக பலமுடைய, சமத்துவமான இந்திய உபகண்டத்தை, அனைத்து மக்களினதும் சுதந்திரத்தின் பேரிலும், விருப்பத்தின் பேரிலும் கட்டிக் காத்து வளர்க்க வேண்டும் என்ற அழகிய கனவொன்றை அழிப்பதாக அமையும். உலகின் நாசகார சக்திகளும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியப் பிராந்திய நலனை சீர்குலைக்க முனையும். முற்போக்குச் சிந்தனையும், தீர்க்க தரிசனமும், மக்கள் நலனில் அக்கறையுமுள்ளோர், இவ் ஆபத்துக்களைப் புரிந்துகொண்டு, இந்திய உபகண்ட மக்களின் விடிவிற்கான, சுபீட்சம் நிறைந்த வாழ்வுக்கான சரியான ஜனநாயக அடித்தளங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் ●

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# தேர்தலுக்குப் பின் இந்தியா

- அரசியல் ஆய்வு -

இந்திய நாடாளுமன்ற தேர்தலும், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலும் நடந்த முடிந்துவிட்டன. அக்கறை அருகி வருவதால் குறைவான வாக்காளர்களே வாக்களித்துள்ளனர். தமிழ்நாட்டில் கடந்தமுறை தேர்தலில் 75 வீதமானோர் வாக்களித்திருக்கும் போது, இம்முறை 60 % மானோர் வாக்களிப்பில் கலந்து கொண்டுள்ளனர். பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற இருந்த தேர்தல் புரட்டாதி மாதத்திற்கு தள்ளிப் போட்டப்பட்டுள்ளது. சீக்கிய தீவிரவாதிகளின் எதிர்ப்பே இதற்கு காரணம். மத்தியில் 220 இடங்களைப் பெற்று முதன்மையாக வந்த இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியை அமைத்துள்ளது. அறுதிப் பெரும்பான்மையான 270 இடங்களுக்கு 50 இடங்கள் குறைவாகவே இந்திரா காங்கிரஸ் பெற்றுள்ளதால் ஏனைய கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சியில் நிலைத்து நிற்கமுடியும். 2 வது அதிக இடங்களைப் பெற்றுள்ள பாரதீய ஜனதாக் கட்சி, எதிர்கட்சி ஸ்தானத்தை வகிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

V.P சிங் தலைமையிலான ஜனதாதளம், CPI, CPM ஆகிய இடதுசாரிக் கட்சிகள், காங்கிரஸ் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவாக இருக்கக் கூடிய இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிகின்றது. அ.தி.மு.க போன்ற கட்சிகளும் காங்கிரஸ் கட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என்பதால், நிலையான ஆட்சி ஒன்றை எதிர்பார்க்கலாம். முன்னாள் வெளிவிவகார அமைச்சரான நரசிம்மராவிற்கும், மகராஷ்டிர முதல்வர் சரத்பவாருக்கும், இந்திரா காங்கிரஸின் தலைவருக்கான போட்டி ஏற்பட்டிருந் தது. அப் போட்டியில் இருந்து சரத்பவார் விலகிக் கொண்டதனால், நரசிம்மராவ் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு, ஜனாதிபதியால் பிரதமராக்கப்பட்டுள்ளார். அனுபவம் வாய்ந்த நரசிம்மராவ் இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு பிரச்சனைகளைச் சமாளிக்கும் விதத்திலேயே, வளர்ந்து வரும் பாரதீய ஜனதாக் கட்சி விஸ்வரூபம் எடுப்பதை தடுக்கும் அவரது ஆற்றல் தங்கியுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் வளர்ச்சிட போக்கை நோக்கும் போது, இந்திரா காங்கிரஸ் கட்சியால் தடுக்கமுடியாத பேரலை என்றே கருதவேண்டியுள்ளது. படிப்படியாக பாரதீய ஜனதாக் கட்சி வலிமை பெறுவது, வரலாற்றில் தடுக்க முடியாத நிகழ்ச்சியாக இருக்கும். காங்கிரஸ் கட்சியால் இந்தியாவின் நோய்களை, பொருளாதார, இன, மத முரண்பாடுகளை சண்டைகளை, நிதி நெருக்கடிகளை வெற்றிகொள்ள முடியாது என்றே கருதவேண்டியுள்ளது. காங்கிரஸின் தோல்வி பாரதீய ஜனதாக் கட்சியின் வெற்றிக்கு வழிவகுக்கும். இந்தியாவின் இந்த நலிவைப் போக்கி, உறுதியான இந்தியாவைக் கட்டி வளர்ப்பதற்கு, உடனடி மருந்தாக அமையப் போவது, பாரதீய ஜனதாக் கட்சியின் இந்து சாம்ராச்சியக் கொள்கையே; மதஅடிப்படைவாத ஆட்சியே. இந்த அடிப்படையிலேயே ஒற்றுமையான, வல்லரசான இந்தியாவை உருவாக்கமுடியும் என பெரும்பான்மை மக்கள் எண்ணுவது தவிர்க்க இயலாத போக்காக இருக்கும். ஊழல்கள் அற்ற, கட்டுப்பாடான அமைப்பாகவே பாரதீய ஜனதாக் கட்சி மக்கள்முன் தோற்றம் தருகின்றது. பாரதீய ஜனதாக் கட்சியின் ஆரியவாதம், பரந்த இந்து சாம்ராஜ்யக் கொள்கை பாசிசமாக வளர்ச்சி பெறுவதும், ஜனநாயக, புரட்சிகர சக்திகளால் அது முறியடிக்கப்படும்வரை அதன் ஆதிக்கம் எதிர்காலத்தில் நிலவும் என்பதும் அரசியல் நோக்கர்களின் கருத்தாக உள்ளது.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை, எதிர்கட்சியே இல்லாத வகையில், அண்ணா தி.மு.க ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. இங்கும் ஒருவகைப் பரம்பரை ஆட்சியே ஏற்பட்டுள்ளது. செல்வி ஜெயலலிதாவின் ஆட்சி, M.G.R இன் பேரில், தமிழ்நாட்டில் கொண்டுவரப் பட்டுள்ளது. தி.மு.க ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு, அ.தி.மு.க வுக்கு ஆதரவாக மாறியது என்ற வாதத்தில் உண்மை உள்ளதா என்பது தெரியவில்லை. தி.மு.கவின் தலைவர் கருணாநிதி மாத்திரமே வெற்றி பெற்றுள்ளார்; அதுவும் ஆக 800 மேலதிக வாக்குகளால். இதன்பொருட்டு, கருணாநிதி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தனது சட்டசபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அ.தி.மு.க வும், தமிழின உணர்வில் வளர்க்கப்படும் கட்சி என்பது மறுப்பதற்கில்லை. மறைந்த முதல்வர் M.G.R இன் வாக்கு வங்கியே அ.தி.மு.க வுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்ததும், M.G.R தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் பெரும் ஆதரவாக இருந்தார் என்பதும் உண்மை. எனவே, முதலமைச்சர் ஜெயலலிதா, வெற்றிபெற்ற ஆரவாரத்தில் , விடுதலைப் போராளிகளுக்கும், தமிழீழ அகதிகளுக்கும் எதிராக சிலவார்த்தைப் பிரயோகங்களை செய்துள்ள போதிலும், தமிழீழ விடுதலையின் மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மேலும் தமிழ் நாட்டு மக்கள் கொண்டுள்ள அன்பும், ஆதரவும், தமிழ் நாட்டு மக்களின் தயவில் தங்கியுள்ள முதலமைச்சர் ஜெயலலிதாவை நெறிப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம். மத்திய அரசின் கட்டுப்பாட்டுள் இருந்தவாறு, ஊழல்களை ஒழித்தவாறு தமிழ்நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தி, நிலைத்து நிற்க முதலமைச்சர் ஜெயலலிதா எடுக்கும் முயற்சி, மலை உச்சியை நோக்கிய பயணம் மேற்கொள்வதைப் போலிருக்கும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசின் முடிவுகள், கொள்கைகளுக்கு கட்டுப்பட்டே மாநில தமிழ்நாடும், முதலமைச்சரும் செயல்படுவார்கள். பிராந்தியத்தில் சீனாவிற்கு பெருகிவரும் செல்வாக்கு, சீனா, சிறீலங்காவின் முதன்மையான ஆயுத விநியோகஸ்தனாக இருப்பது, இந்திய அரசினதும், விடுதலைப் புலிகளினதும் பரஸ்பர புரிந்துணர்வுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கலாம் ●

## புலனாய்வு

செய்தி: - ராஜீவ் கொலையின் முக்கிய சூத்திரதாரியான எஞ்ஜினியர் மதிமோகன் தேடப்படுகின்றார்.

பிந்திய செய்தி: - ராஜீவ் கொலை செய்யப்பட்ட வேளையில் மதிமோகன் கொழும்பிலே தங்கி வேலை பார்த்துவந்துமுள்ளார். இதனை அவர் போதிய ஆதாரங்களுடன் கொழும்பு சென்ற புலனாய்வாளர்களிடம் நேரில் சென்று நிரூபித்தார். அத்துடன் புலனாய்வாளர்கள் கொண்டுசென்ற புகைப்படத்துடன், மதிமோகன் சிறிதேனும் பொருந்தவில்லை. புலனாய்வாளர்கள் தெளிவடைந்தனர்.

செய்தி: - ராஜீவ் காந்தியின் கொலைக்கு காரணமாக இருந்த பெண் வவுனியாவைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக, இக் கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட குழு கண்டுபிடித்துள்ளது.

பிந்திய செய்தி: -வவுனியா சென்ற விசேட புலனாய்வுக்குழு, கொலைக்குக் காரணமானவர் என சந்தேகித்த பெண், வவுனியாவில் உயிருடன் இருக்கிறார் என்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளது. வவுனியா வாசியான அப்பெண்ணிற்கும் கொலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என விசாரணைக்குழு தெளிவடைந்தது.

## முரண்பாடு

எயா வைஸ் *மார்ஸல்* வோல்டர் பெர்னாண்டோ: - கடந்த ஒருவருட மோதலில் 1369 பாதுகாப்புப் படையினரை நாம் இழந்துள்ளோம்; 585 பேர் காணாமல் போனார்கள். புலிகளின் இழப்புப் பட்டியல் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதால் இங்கு வெளியிட விரும்பவில்லை.
( வீரகேசரி 16.06.91 )

பாதுகாப்பு அமைச்சு : - கடந்த ஒருவருட யுத்தத்தில் 1282 பாதுகாப்புப் பிரிவினர் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 480 பேர் தொடர்பாக எதுவித தகவலும் இல்லை.
( வீரகேசரி 16.06.91 )

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# நிழலல்ல நிஜம்

ஒளசி

பழங்காலக் கோட்டைக் கதவுகள் போன்று, பராமரிப் பற்று, ஊத்தைப்படிமங்கள் மண்டிக்கிடந்த அந்த மரக் கதவு, மழை ஈரத்தால் உப்பிப்போயிருந்தது. ஆங் காங்கே பொருத்தப்பட்டு, மூப்படைந்த அம்மரக்கதவை மரணத்தில் இருந்து காத்து நின்ற இரும்புச் சட்டங்கள், துருப்பிடித்து புதிய உருவத்தில் காட்சியளித்தன. வடி கால் வசதி ஒழுங்கான முறையில் இல்லாத, நாற்ற மெடுக்கும் சந்தைக் கடந்து இராட்சத விலங்குபோல் பயமுறுத்திக் கொண்டிருந்த அக் கதவை, மிகுந்த சிர மத்தின் மத்தியில் திறந்துகொண்டு உள்நுளைந்தான் அவன்.

சிறுவன் அல்லன், இளைஞனும் அல்லன்; விளையாட் டுப் பருவத்தைக் கடந்து, விசயங்களை விவகாரத் தோடு பார்க்கின்ற பருவத்தை நெருங்குபவன். வாழ்க் கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற நெடிய பாதைகள் சந்திக்கின்ற, ஆபத்து நிறைந்த சந்தியில் நிற்பவன். வாழ்க்கையின் நிர்ப்பந்தம், தேசத்தின் தேவைகளை மறுத்து அவனை நாடுகடத்தியது. இது சரியோ, தப்போ என்ற ஆராய்ச்சியில் அவன் ஒருபோ தும் ஈடுபடுவதில்லை. அடிக்கடி தனக்குள் நொந்து கொள்வான் அவ்வளவுதான். புரட்சி, வெகுசனக் கிளர்ச்சி, பாட்டாளிவர்க்கம், குட்டிமுதலாளித்துவம், இன்னும் பிற கவர்ச்சியூட்டும் அரசியல் சொற்பிரயோ கங்கள் பற்றி அவனுக்கு அவ்வளவாகத் தெரியாது; ஆச்சரியத்திற்குரிய இவ்வகைச் சொற்பதங்களுக்குள், ஏதோ, தன்னால் புரிந்துகொள்ள முடியாத விடயங்கள் புதைந்திருக்கின்றன என்பதை அவனால் உணரக்கூ டியதாக இருந்தது. எனினும், அவன் அவற்றை தெரிந்து கொள்ள முயற்சி எடுத்தது இல்லை. இது அவனது பலவீனமாகக் கூட இருக்கலாம். ஆனால் தங்கட கிராமத்தில, தங்கட வயல்வெளியளில தாங்கள் பழை யமாதிரி விளையாடவேணும்; கோவில் திருவிழாக்கள் எல்லாம் பழையமாதிரி ஒழுங்காக நடக்கவேணும்; வருசாவருசம் நடக்கிற பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டியள் எல்லாம் தடங்கல் இல்லாமல் நடக்கவே ணும்; இஷ்டத்துக்கு தாங்கள் சந்தோஷமாக உலாத்த வேணும்; படம் பார்க்கோணும்; ஆத்தில குளிக்கோ ணும்; இன்னும் இது போன்ற, தன்னுடன் சம்பந்தப்பட்ட இன்பந்தரும் விடயங்களையெல்லாம், ஏக்கத்துடன் நினைவுகூர்வான். "என்ர அண்ணவையளை சுட்ட ஆமிக்காரங்களை எல்லாம் சுட்டுப் பொசுக்கவேணும். செத்துப் போனவை திரும்பி வரமாட்டினம்தான்; எண் டாலும் ஆமிக்காரங்கள் எல்லாரும் சாகவேணும்" என்று தனக்குள்ளே ஆவேசமாகப் பொங்கிக் கொள் வான்.

ஒழுங்கற்ற படிக்கட்டுகளில் மிகவும் அவதானமாக ஏறினான். நீண்டகாலமாக அந்த பாழடைந்த மாடிக்கட் டிடம் பராமரிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது என்பது துல்லியமாகத் தெரிந்தது. துர்நாற்றம் வீசும் பொது மலசலகூடங்கள் முழுப்பகுதியையும் நாறடித்துக் கொண்டிருந்தன. வர்ணங்கள் சிதைந்து போயிருந்த அந்தச் சுவர்கள் எங்கணும், வேவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மனிதர்களின் வக்கிரம் நிறைந்த எண்ணங்கள், கிறுக்கல் சித்திரங்களாகவும், வெவ்வேறு பாஷையி லான எழுத்துருவங்களாகவும் காட்சியளித்தன.

தரையில் நிறைந்திருந்த அழுக்கு, மரப்பலகையை மூடி, கறுப்புக் கம்பளம்போல் காட்சியளித்தது. ஒவ்வொரு அறைக்கதவுகளுக்கும் அருகில், கட்டிப் பாதுகாக்கப் படாமல், கேட்பாரற்று, ஊத்தைப் பைகள் சிதறிக்கிடந் தன.

இந்த வேதனைமிகு காட்சிகளை சகித்துக்கொண்டு, "எங்கட ஆக்கள் இப்படியெல்லாம் வாழவேண்டியதாக உள்ளதே" என்ற மனத்தாங்கலுடன், ஆறு மாடிகளைக் கடந்து ஏழாவது மாடியில் உள்ள அந்த அறைக்கத வைத் தட்டினான்.

கதவு திறந்துகொண்டது. கதவைத் திறந்து அவனை உள்ளே அனுமதித்த அந்த பெருத்த உருவம், மீண்டும் கட்டிலில் மல்லாக்க விழுந்து, தனது, பாவனைக்கு உதவாத, சகிக்கமுடியாத வாடை கொண்ட அந்தத் தடித்த கம்பளிப் போர்வையால் தன்னை முழுமையாக மூடிக்கொண்டது. அசைவற்றுக் கிடந்த அந்த மனித னும், அறையின் தன்மைகளும் அவனை அச்சத்தில் ஆழ்த்தின. நீட்டிநிமிர்ந்து கிடந்த அந்த மனிதனை எழுப்பி, தனது வரவின் நோக்கத்தை, தாய் மண்ணின் போராட்டத்திற்கான பங்களிப்பை அவனிடம் எதிர்பார்க் கின்ற தனது எண்ணத்தை, அந்த மனிதனுக்கு புரிய வைக்க இளைய பருவத்தினன் பெரிதும் முயற்சி எடுத் துக்கொண்டான். இளைய பருவத்தினது தொடர்ச்சி யான பிரயத்தனம், தனது நிம்மதியைக் கெடுக்கின்ற நச்சரிப்பு என அந்தப் பெரிய மனிதன் பூரணமாக உணர்ந்துகொண்டான். நெஞ்சாங்கட்டை விலகிய சுட்ட பிணம்போல், உணர்வுகளற்று எழுந்து உட்கார்ந்த அந்த மனிதன் சிகரட் ஒன்றை எடுத்து லாவகமாகப் பற்ற வைத்துக்கொண்டு, அழகான உருண்டைகள் விட்டுக் கொண்டிருந்தான். நெளிந்து, சுருண்டு செல்லும் புகை உருண்டைகளைப் பார்த்து பெருமையுடன் ரசித்துக்கொ ண்டான். அலட்சியமான பார்வை ஒன்றை இளைய பருவத்தினன் மேல் பாச்சியபடி, விதண்டாவாதமான பேச்சுக்களை ஆரம்பித்தான். மூளைக் கிறுக்கன் போன்று ஏதோவெல்லாம் பேசினான். தான் ஒரு அறி வாளி போலவும், புத்திக்கூர்மை உடையவன் போலவும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


காட்டிக் கொள்ள, தொடர்பில்லாத கதைகளை எல்லாம் பேசினான். உலகத் தலைவர்களின் மனைவியர் பற்றியும், அவர்களது உடைகள் பற்றிய நுணுக்கமான விடயங்கள் குறித்தும் ஆர்வத்துடன் பேசினான். அவர்களது குழந்தைகள் விரும்பி ஆடுகின்ற விளையாட்டுக்கள் குறித்தும் மிகவும் அக்கறையுடன் எடுத்துக்கூறினான்.

தான் அளந்து கொண்டிருப்பனவற்றை, இளைய பருவத்தினன் ஏற்கனவே அறிந்திருக்கவில்லை என்பதை அடிக்கடி உறுதிப்படுத்திக்கொண்டு, திருப்தியுடன் மென்மேலும் கதைகள் விட்டான்.

எமது நாட்டைப்பற்றி கதைப்பதிலேயோ, அறிவதிலேயோ அவன் நாட்டம் கொள்ளவில்லை. அதை சின்னத்தனமான, நகைப்புக்கிடமான விவகாரமாக, தான் கணிப்பது போன்று நடித்தான்.

பேச்சுக்களிடையே தான் அனுபவிக்கின்ற, உணவு, உடை, உறையுள் ,... இன்னும் பிற வசதிகள் குறித்து பெருமைப்பட்டதுடன், சுதந்திரம் பற்றிய அவனது அறிவின் பற்றாக்குறை, மேற்படி அயிட்டங்களுடன் சம்பந்தப்படுத்திப் பேசவைத்தது. சுதந்திர மனிதனாக அடிக்கடி தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டான்.

நாட்டைப்பற்றிப் பேசும் தருணங்களில், மோசமான சண்டைகளை வரவேற்பவன் போலவும், மக்களின் இறப்புகளின் எண்ணிக்கையில் அதிக வளர்ச்சி காணப்பட வேண்டும் எனவும், வக்கிரமான தனது எண்ணங்களை பூடகமாக முன்வைத்தான். இதுவே ஈழத்தமிழருக்கு உலக ஆதரவைப் பெற்றுத்தரவல்லது எனவும்; வெளிநாடுகளில் தங்கியிருக்கின்ற மக்களின் நலன் காக்க உக்கிரமான போர் தொடரவேண்டும் எனவும், போராளிகளின் இறப்புகள் பாதிப்புக்களை ஏற்படுத்தாத வெறும் செய்திகள் என்பன போன்ற அவனது கொடூரமான ஆசைகளும், எண்ணங்களும் பேச்சின்வழி வெளிப்பட்டு நின்றன.

அவனது நீண்ட தொடர் பேச்சில் சலிப்புற்று, பேச்சை இடைநிறுத்த முயற்சித்த இளைய பருவத்தினன் தோற்றுப் போனதுடன். தனது நோக்கத்தை அவன் சட்டை செய்யவில்லை என்பதையும், அது ஒருபோதும் இவனிடத்தில் நிறைவேறப் போவதில்லை என்பதையும் ஐயத்திற்கு இடமின்றி புரிந்துகொண்டான்.

அறிவாற்றல் மருந்துக்கேனும் இல்லாத அந்தப் பெரிய மனிதன், தன்னை ஒரு சுதந்திர மனிதனாக பாவனை செய்து, தாய் மண்ணை மீட்க வேண்டிய அவசியம் தனக்கில்லை என்பது போன்ற தனது நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக இருந்தான். மேலும் பாவத்திற்கு இரங்கி பணம் கொடுப்பதாக இருந்தாலும், சண்டைகள் கிளு கிளுப்பூட்டும் விதத்தில் அல்லது பரவசப்படுத்தும் விதத்தில், குறிப்பிட்டுச் சொல்லிப் பெருமைப்படும் விதத்தில் நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, தனது திருப்தியீனத்தை வெளிப்படுத்திக்கொண்டான்.

விலங்குத் தனமான அவனது பார்வையும், அதைவிட மோசமான அவனது பேச்சும், மிகப் பரிதாபப்படவேண்டிய அவனது கவர்ச்சிகரமான தற்சிந்தனையும், குறிப்பிட்டுச் சொல்லமுடியாத ஒருவகை விநோத உணர்வை இளைய பருவத்தினனிற்கு ஏற்படுத்தி மறைந்தன. இது போன்ற பிற புதுமையான அனுபவங்களை ஏற்கனவே சந்தித்த அந்த இளைய பருவத்தினன், புதிய நூதனமான ஒரு உயிர் பற்றிய தனது அனுபவத்தை, நகைச்சுவை துளிர்க்கும் தனது அபிப்பிராயங்களுடன் "அநுபவச் சேகரிப்பில்" சேகரித்துக்கொண்டான் ●

## அனுபவம்

ஒரு வீட்டில், பெண்கள் பீதியுடன் இருப்பதைப்பார்த்த அமைதிப்படை அதிகாரியான மேஜர் ஏ.ஏ. வர்க்கீஸ், அவர்களுக்கு சமாதானம் சொல்ல அந்த வீட்டுக்குள் சென்றார். திடீரென ஒரு மூதாட்டி அந்த இடத்திலேயே துப்பாக்கியை எடுத்து அவரைச் சுட்டுக்கொன்றுவிட்டார். அதிலிருந்து, இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் பெண்களைச் சாதாரணமாகக் கருதக்கூடாது என்று இந்திய இராணுவம் பாடம் கற்றுக்கொண்டது.

- இந்தியா டுடே யூன் 1991 -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஈரம் உலராத எல்லை நெடுகிலும்....

- தமிழக கவிஞர் இன்குலாப் -

கடலை அடைக்கும் இந்திய அரசே!
அடையாளம் காட்டுவாயா?
துப்பாக்கிக் குரைப்பில்
முழங்கப் பயந்த
அலைகளில் ஒன்றை?

அடையாளம் காட்டுவாயா
பீரங்கி அதட்டலில்
அசையாது நின்ற
அலைகளில் ஒன்றை?

உறவு கொள்ளும் கை
எங்கும் நீளும்.

உனது காவல்
அலைகளுக்கு மேலேதான்.
உறவுக்கு நீளும் கை
அலைகளுக்கு அடியிலும்.

பார்வைக்குப் பட்டவை
கங்கையும் காவிரியும்.

காந்தும் பாலையின்
கானல்களுக்கு அடியில்
அறியப்படாத
நதிகள் ஆயிரம்.

அலைகடலை ஒரு
சுவராய் நிமிர்த்தலாம்.
ஆயுதங்களால் அதைச்
சிறையாய் நிறுத்தலாம்.

இடிந்து கிடப்பவை
பாஸ்டிலும் பெர்லினும்
எழுந்து நிற்பது
விடுபட்ட மானுடம்.

ஆயுத வரத்து
உன்
அனுமதியில் இல்லை.

கைப்பற்றப்பட்ட
படகுகளில் இல்லை
போராளிக்கு வேண்டிய
குண்டும் துப்பாக்கியும்.

ஈழமண்ணில்
ஒவ்வொரு புல்லும்
எதிரியைத் துளைக்கும்
ஈட்டியாய் முளைக்கும்.

காட்டில் விழிக்கும்
ஒவ்வொரு பூவும்
கண்ணிவெடியாய்
எதிரியைச் சாய்க்கும்.

கடலைச் சுற்றிக்
கட்டுப்படுத்தியதாய்
வானத்தை வளைத்து
மடக்கி விட்டதாய்
மனப்பால் குடித்து நீ
மயங்கிக் கிடக்கலாம்.

அடிமைத் தனத்தில்
முடங்கிய உனக்கு
விடுதலை வானத்தின்
விளிம்புகள் தெரியாது.

ஈழத்தின் நம்பிக்கை
மண்ணில் இருக்கிறது.
ஈழத்தின் நம்பிக்கை
வானில் இருக்கிறது.
கடலில் இருக்கிறது.
கனலில் இருக்கிறது.
காற்றில் இருக்கிறது.
மக்களில் இருக்கிறது.

துருப்பிடித்த உன்
சிறைக்கம்பிகளால்
துப்பாக்கிகளால்
கை விலங்குகளால்

ஊரிமைக் குரலை நீ
ஒடுக்க நினைக்கலாம்.
உலகின் கண்கள்
பொய்களால் மூடலாம்.

கரையை இணைப்பது
கடலும் அலையுமோ?
உணர்வை இணைக்கும்
தாய்மொழி... அறிவாயோ?

அதனால்,
தோப்புத் தென்னையின்
கீற்றுச் சலசலப்பில்
ஈழப்புலிகளுக்குச்
சேதிகள் இருக்கும்.

ஈரம் உலராத
எல்லை நெடுகிலும்
ஈழப்புலிகளின்
சுவடுகள் இருக்கும்.

******

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கியூபெக்

## கியூபெக் மக்களின் சுதந்திரம் கிட்டுமா ?

கியூபெக், கனடா நாட்டின் ஒரு மாகாணம். அழகான மாகாணம் (La Belle Province) என்ற பெயரும் உண்டு. இம்மாகாணம் பிரெஞ்சு மொழி பேசும் மக்களைக் கொண்டதாக இருக்க, கனடாவின் ஏனைய மாகாணங்கள் ஆங்கில மொழி பேசுபவர்களைக் கொண்டதாக உள்ளன. ஐரோப்பாவிலிருந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து சென்று குடியேறியவர்களின் சந்ததியே கனடா என்ற சமஷ்டிக் குடியரசின் பிரஜைகளாக உள்ளனர். கனடாவின் தலைநகராக ஒட்டாவா உள்ளது.

கியூபெக் மாகாணம், சுதந்திரத் தனி நாடாகப் பிரிந்து செல்ல வேண்டும் என்று 60, 70 ம் ஆண்டுகளில் போராட்டங்கள் இடம் பெற்றன. கியூபெக் விடுதலை முன்னணி என்ற அமைப்பு ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபட்ட இன, மொழி அடிப்படையிலான தமது தனித்துவத்தைப் பேணுதல், பொருளாதார சுதந்திரத்தை அடைதல், தீவைப்போன்றிருக்கும் கியூபெக் மக்களைச் சூழ்ந்து, கடலைப் போன்று இருக்கும் ஆங்கிலம் பேசும் மக்களின் அழுத்தம் ஆகியவை தனிநாட்டுப் போராட்டத்துக்கான உந்துதல்களாக இருந்தன. பிரெஞ்சு மொழியினரான பியர் எலியட் ரூடோ கனடாவின் பிரதமராக இருந்த காலங்களில் இரு மக்களுக்கும் இடையேயான பாரபட்சங்கள் நீங்கி சமத்துவம் பேணப்படும் அறிகுறிகள் தோன்றின. 1980 ம் ஆண்டில் கியூபெக் மாநிலத்தில் சுதந்திரமா அல்லது கனடாவுடனான சமஷ்டி ஆட்சி முறையா என்ற கேள்விகளின் அடிப்படையில் மக்களின் கருத்தை அறியும் பொருட்டு சர்வசன வாக்கெடுப்பு நடைபெற்றது. 60 வீத மக்கள் கனடாவுடன் சமஷ்டி அடிப்படையில் இணைந்திருப்பதை விரும்பியதால் தனிநாட்டுக் கோரிக்கை வலுவிழந்து போய்விட்டது. அதே வேளை, இரு மக்களுக்கும் இடையில் சமத்துவம் கிடைத்துவிட்டதாகவோ, கியூபெக் மக்களின் அதிருப்தி நீங்கி விட்டதாகவோ எவரும் கருதவுமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர், தற்போது, பிரதமராக இருக்கும் பிரையன் மல்ரோனியின் பழமைவாதக் கட்சி அரசாங்கம், கியூபெக் மாகாண அரசாங்கத்தோடு மீச் லேக் என்ற இடத்தில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது. இது மீச் லேக் ஒப்பந்தம் எனப்பட்டது. இவ்வொப்பந்தம் மூலம் கனடாவின் சமஷ்டி அரசியல் அமைப்பு கூட்டாட்சி (Confederal) அமைப்பாக மாற்றம் அடையப்போவதாக எதிர்பார்ப்பு ஏற்பட்டது. கியூபெக்கின் பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் தனித்துவமான மக்களாக அங்கீகரிக்கப்பட்டு, பிரெஞ்சு மொழிக்கு ஆங்கில மொழிக்குரிய சம அந்தஸ்து கொடுக்கப்பட்டு பொதுச் சேவைகளில் அரச கரும மொழியாகவும் ஆக்கப்பட்டது. பிரெஞ்சுப் பிள்ளைகள் எந்த மாநிலத்தில் வசித்தாலும் பிரெஞ்சு மொழியில் கல்வி கற்கவும் உரிமை வழங்கப்பட்டது. கடந்த வருடம் இந்த ஒப்பந்தம், பெரும் பான்மையான ஆங்கில மொழி பேசும் மாகாணங்களால் அங்கீகரிக்கப்படாது நிராகரிக்கப்பட்டதால் சட்ட அந்தஸ்து பெறவோ அல்லது நடைமுறைப்படுத்தப்படவோ முடியாது குப்பைத்தொட்டிக்குள் தூக்கி வீசப்பட்டது. அதனைத் தொடர்ந்து கனடா அரசாங்கம் இவ்வரசியல் பிரச்சனையை தீர்க்கும் முகமாக, அரசியல் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான ஒரு உப கமிசனை நியமித்துள்ளது. அவ் உபகமிசன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. மீச் லேக் ஒப்பந்தம் தோல்வி கண்டது, கனடா என்ற ஒரே அரசினுள் பிரச்சனையைத் தீர்க்க எடுத்த முடிவுக்கு பெரும் சம்மட்டி அடியை கொடுத்தது. ஆங்கிலம் பேசும் மாகாணங்களும், மக்களும் சமத்துவமான தீர்வு ஒன்றுக்குத் தயாரில்லை என்பதைக்கண்ட கியூபெக்கின் பிரெஞ்சு மக்களின் 2/3 பகுதியானோர் தனியான சுதந்திர நாட்டை அமைக்க வேண்டும் என்ற கொள்கையை பெருமளவில் ஏற்றுக்கொண்டு வருகின்றனர். அந்த மாற்றமே தற்போது நிகழ்ந்து கொண்டு வருகின்றது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கடந்த மே மாதத்தில் கியூபெக் மாகாணத்தின் எதிர்க் கட்சியான கியூபெக் கட்சியின் தலைவர் ஜக் பரிஸூ, பிரான்சுக்கு விஜயம் செய்ததும், அவர் கூறிய கருத் துக்களும் முக்கியம் பெறுகின்றன. பிரெஞ்சு ஜனாதி பதி பிரான்சுவா மித்தரோனால் கியூபெக் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் உத்தியோகபூர்வமாக வர வேற்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். பிரான்ஸ், கியூபெக் மக்கள் விடயத்தில் வழிகாட்டி யாக செல்லாத போதிலும், கூடவே பயணப்படும்." என்று பிரெஞ்சு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

சுதந்திர கியூபெக் நாட்டை அமைப்பதில் கியூபெக் கட்சி உறுதியாக இருப்பதாகவும் அப்புதிய அரசு தனது சொந்த வரிகளை விதிக்கக் கூடியதாகவும், சட்டங்களை இயற்றக்கூடியதாகவும், பிற நாடுகள், அமைப்புக்களுடன் ஒப்பந்தங்களை செய்யக்கூடிய தாகவும் இருக்கும் என்றும் ஜக் பரிஸூ தெரிவித்துள் ளார். ஆயினும் முக்கிய பொருளாதார விடயங்களி லும், சுங்கச் செயற்பாடுகளிலும் நிதிக் கொள்கை ளிலும் கனடாவுடன் "கூட்டுறவாகச்" செயற்படப் போவதாக கூறியுள்ளார். கியூபெக் தனது நீதிச் சேவையையும் இராணுவத்தையும் கொண்டிருக்கும் என்று கூறிய அதேவேளை, கனடாவிற்கும், ஐக்கிய அமெரிக்காவிற்கும் இடையிலான, NORAD (North American Air Defence) என்றழைக்கப்படும் இராணுவக் கூட்டமைப்பில் தொடர்ந்து இருக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். இத்தகைய கூட்டுறவான (Associa-e Structure) கொள்கை காரணமாக, ஐக்கிய அமெரிக் காவும், சுதந்திர கியூபெக் நாட்டின் உருவாக்கத்துக்கு டும் எதிர்ப்பைத் தெரிவிக்காது என அறியப்படுகின் து.

1992 ஒக்ரோபர் மாதம் முக்கிய காலமாக கருதப்படு கின்றது. தனிநாட்டுக் கோரிக்கைக்கு கியூபெக்கில் பெருகி வரும் ஆதரவு, தற்போது கியூபெக் மாகாணப் பிரதமராக இருக்கும் றொபேர் யூராசாவை, கருத்துக் கணிப்பீடு ஒன்றை நடத்த நிர்ப்பந்தித்துள்ளது. எனவே மீண்டும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பை கியூபெக் மாநிலத்தில், 1992 ஒக்ரோபர் மாதத்தில் வைக்கப் போவதாக அவர் அறிவுப்புச் செய்துள்ளார்.

இக்குறிப்பிட்ட காலகட்டத்தினுள் கனடாவின் சமஷ்டி அரசாங்கம், கனடா நாட்டினுள், அதன் அரசியல் சட்டத்தினுள் பிரச்சனையை தீர்ப்பதற்கான திட்டத்தை முன்வைக்க வேண்டும். அது நியமித்துள்ள உபகமிசன், அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, நடைமுறைச் சாத்தியமான அரசியல் சட்ட மாற்றத்திற் கான முன்மொழிவு செய்தல் வேண்டும். கனடாவின் மத்திய அரசாங்கம், 1992 ல் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பலவீனமான கூட்டணி யாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனிப் பெரும்பான்மையைப் பெறும் ஒரு கட்சி ஆட் சியை கைப்பற்றாது, பல கட்சிகளை இணைத்த கூட் டணி பதவிக்கு வருகின்ற சூழ்நிலையில், கியூபெக் பிரச்சனை தீர்க்கப்படக்கூடிய விதமாக மத்திய அரசு பலமாக இராது என்றே கருதப்படுகின்றது. எனவே கியூபெக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுவதும், மக்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு பெரும்பான்மை ஆதரவளிப்பதும், புதிய நாடு உருவாகுவதும் தவிர்க்க முடியாதது என்றே தெரிகின்றது. ●

## போராட்டம்.

கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கொழும்பிலுள்ள P.L.O.T, T.E.L.O, E.P.D.P, E.P.R.L.F ஆகிய குழுக்கழுடன் பாதுகாப்பு அமைச்சின் இணைப்பதிகாரி பிரிகேடியர் பி.கே.பி. பெரேரா மகாநாடொன்றை நடத்தினார். இம் மகாநாடு 28.06,91 அன்று கொழும்பில் நடைபெற்றது.

L.T.T.E இனரின் பயங்கரவாத நடவடிக்கைகளினால், கொழும்பில் எழுந்துள்ள நெருக்கடி நிலை குறித்தும் எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தமிழ்க் குழுக்களுடன் விரிவாக ஆராய்ந்தார். கொழும்பினதும், ஏனைய பகுதிகளினதும் பாதுகாப்பிற்கு எடுக்கும் நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் உறுதியளித்தனர்.

ஒவ்வொரு குழுவும் கொழும்புப் பாதுகாப்பிற்கென தலா 100 பேர் வரையிலான உறுப்பினர்களை வைத்துள்ளது.


கொழும்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையில் இக் குழுவினருக்கு விசேட சலுகைகளும் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எரிகின்ற ஒளி



அடேல் பாலசிங்கம்

**லண்டன் கார்டியன் பத்திரிகையில் கபிரியலா கமினி என்ற பத்திரிகை நிருபர், வடக்கில், புலிகளின் முகாம் ஒன்றில் தான் சந்தித்த விடுதலைப் பெண்புலி அடேல் பாலசிங்கத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.**

அவர் வெள்ளை இனத்தவர். 40 வயதுடைய அவர் பிரிட்டிஷ் பிரஜை. வீட்டுத் தோட்டம் செய்வதில் விருப்புள்ளவர். அவர் AK 47 தானியங்கித் துப்பாக்கியை தோளில் சுமந்திருந்தார். உயிருடன் பிடிபடும் போது கடிப்பதற்காக சைனைட் குப்பியை கழுத்தில் மாலையாக அணிந்திருந்தார். அவர் அணிந்திருக்கும், தொளதொளப்பான நீளக் காற்சட்டையின் மேல், இடுப்பைச் சுற்றிக் கட்டியிருக்கும் வார்ப்பட்டையில், எறிகுண்டுகளும், ரவைகளும் காணப்பட்டன.

தமிழ்ச் சுதந்திரப் போராளியான இவர் அவுஸ்திரேலியாவில் பிறந்தவர். முதல் பார்வையில், மெலிந்தவராகவும், மென்மையாகப் பேசுபவராகவும் தோற்றம் தந்தார். தனது பொழுதுபோக்கு மரக்கறித் தோட்டத்தில் கழிகிறது, என்று கூறும் அவரது தோளில் தொங்குகின்ற AK 47 தானியங்கித் துப்பாக்கி, அவரைப் பற்றி வேறொரு கதையைச் சொல்லிக்கொண்டிருந்தது.

இலங்கையில் இரத்தம் சிந்தலுடன் நடைபெறும் உள்நாட்டுப் போரின் மத்தியில் 10 ஆண்டுகள் அவர் வாழ்ந்துவிட்டார். சேறு நிறைந்த பதுங்கு குழிகளுக்குள் தாக்குப் பிடிக்கக் கற்றுக் கொண்டுள்ளார். ஒருமுறை இராணுவத்தின் தேடுதல் நடவடிக்கையில், பிடிபடாமல் நீர் நிறைந்த வயல் வெளிகளினூாடு 48 மணித்தியாலங்கள் ஓடித் தப்பியுள்ளார். குண்டுகள் அவரது இருப்பிடத்திற்கு மிக அருகில் விழும்போது, படுகை வசதிகளைத் தூக்கி எறிந்து பதுங்கு குழிக்குள் ஓடி ஒளியும் தயார் நிலையிலேயே அவர் இருந்தார்.

70 ம் ஆண்டுகளின் பின்னர் சிறீலங்காவின் சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்து சுதந்திரமான தமிழரின் தாயகத்தை அடைவதற்காகப் போராடும், தமிழ்ப் புலிகளின் ஒரு கெரில்லாவாகவே அவர் இருந்துவருகின்றார். 1978 ம் ஆண்டு தமிழர் ஒருவரை லண்டனில் திருமணம் செய்த பின்னர், மெல்பேர்ண் நகரில் ஆசிரியராகப்போகும் வாய்ப்பைத் துறந்து, வடக்குகிழக்கின் உலர்வலயக் காட்டினுள்ளே தனது வாழ்க்கையை அமைத்தார். அவர் லண்டனில் பல்தொழிற் கல்லூரி ஒன்றில் சமூகக் கல்வி பயின்று கொண்டிருந்த வேளை, லண்டன் கோல்ட் ஸ்மித் கல்லூரியில் பணிபுரிந்த, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக விளங்கும் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தார்.

"அப்போது நாங்கள் இருவரும், இங்கிலாந்தில் இனவாதத்திற்கும், நவபாஸிஸ குழுக்களுக்கும் எதிராகப் போராடி வந்தது, எங்கள் இணைவுக்குக் காரணமாயிற்று." என்று தெரிவித்த அடேல், பெரும்பான்மைச் சிங்களவர்களால் தமிழ் மக்கள் அடக்கப்படுவது குறித்து, பாலா தன்னிடம் கூறியதாகக் குறிப்பிட்டார். (பாலா என்று அழைக்கப்படுவது, தற்போது தமிழ்ப் புலிகளின் சர்வதேச பேச்சாளராக இருக்கும் அன்ரன் பாலசிங்கம்.) "அதனை நேரில் இலங்கைக்கு வந்து கண்டுகொண்டேன். அதனைத் தொடர்ந்து நான் புலிகளுடன் சேர்ந்துவிட்டேன்" என்று அடேல் மேலும் கூறினார்.

அடேல் பாலசிங்கம், அரசியல் வழிகளினூடு தமிழர்கள் தங்கள் சுயஆட்சியை அடையமுடியுமென்று முன்னர் வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டார். மூன்று வருடம் மிகக் கடுமையான இராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டார். இதுவரைக்கும் அவர் எவரையும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கொல்லவில்லை. அப்படி ஒரு சந்தர்ப்பம் வரும் போது அதனைச் செய்யத் தயங்கப் போவதில்லை. "தமிழ் மக்களுக்கு சுயஆட்சியைப் பெற்றுக் கொடுக்குமென்றால் நான் எதனையும் செய்யத் தயாராக உள்ளேன். சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் எனது வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்டேன். ஆரம்பத்தில் ஆயுதங்களின் பிரயோகத்தை நான் ஆதரிக்கவில்லை. இம்மக்களைப் பாதுகாப்பதற்கு இதுவே தவிர்க்கமுடியாத ஒரே வழியென நிச்சயம் ஆனபோது, அதனை வரவேற்றேன்." என்று அடேல் கூறினார்.

"இந்த நாட்டை ஆட்சியாளர்கள் துப்பாக்கி அதிகாரத்தால் ஆளுகின்றார்கள். சிங்கள ஆயுதப்படைகளின் தாக்குதல்களில் இருந்து எமது மக்களைப் பாதுகாக்க எம்மிடம் உள்ளவை இவ்வாயுதங்களே" என்று கூறிய அடேல், 1983,1987 ம் ஆண்டுப் படுகொலைகளின் போது ஆயிரக்கணக்கான தமிழ்ப்பொதுமக்கள் கொல்லப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

"தமிழ்ப் பகுதிகள் இரவும், பகலும் குண்டு வீச்சுக்கு உள்ளாகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்று கூறுகின்றார்கள் ஆனால், முழுச்சமூகத்திற்கும் எதிரான போராகவே உள்ளது" என்று கூறினார். வடபகுதியில், அவரின் காட்டு மறைவிடத்தில் நாம் அப்போது இருந்தோம். இரவு நேரம் அண்மையில் உள்ள கிராமங்களில் குண்டுமாரி பொழிந்த வண்ணமிருந்தது.

போரில் காயம்பட்ட பொதுமக்களுக்கு சேவைசெய்யும் பொருட்டு வைத்தியசாலை ஒன்றில் கடமை புரிந்துவந்தார். "புலிகளின் குரல்" என்ற ஆங்கில சஞ்சிகை வெளியீட்டிலும் பங்கு பற்றினார். நாளும் எண்ணிக்கையில் வளர்ந்துவந்த விடுதலைப் புலிகளின் இராணுவ அணியில் சேரும்படி பெண்களைத் தூண்டிவந்தார்.
"பெண்கள் போதும்போதும் என்ற அளவு துன்பத்திற்கு ஆளாகின்ற காரணத்தால், அவர்கள் இதில் இணைவது அவசியம் எனக் கருதினேன்" என்று அடேல் கூறினார். பெண்களை மட்டுமே கொண்ட முகாம்களை அமைத்ததோடு, அவர்களுக்கு பயிற்சியும் அளித்து வந்தார். அவர்கள் இராணுவ இலக்குகள் மீது தாங்களே திட்டமிட்டு தாக்குதல்களை நடத்திவருகின்றனர். "இப் பெண்களில் சிலர் சிறீ லங்கா இராணுவத்தால் கற்பழிக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர், தமது குடும்பத்தினர் கொல்லப்படுவதைக் கண்டுள்ளனர். எனவே, தங்கள் மக்களைப் பாதுகாக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது" எனக் கூறினார்.

விடுதலைப் புலிகளின் போர் அணியில் 3000 பெண் போராளிகள் இருக்கின்றனர். வீட்டையும், குடும்பத்தையும் கட்டிக்காக்கும் பாரம்பரியமுடைய இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள இச்சமூகத்தில், இவ்வளவுத் தொகைப் பெண்கள் போராளிகளாக உள்ளது பெரிய விடயமே. "தமிழீழச் சமூகம் போராட்டத்தில் கொண்டுள்ள உறுதியான உணர்வையே இது காட்டுகின்றது" என்று கூறிய அடேல், ஆண் ஆதிக்கம் உள்ள இச்சமூகத்தில் பெண்களின் உரிமைகளை தாங்கள் வலியுறுத்துவதாகவும் தெரிவித்தார்.

காட்டினுள் ஒரு மறைவிடத்தில் இருந்து இன்னொரு மறைவிடத்திற்கு மாறி வாழும் தலைமறைவு வாழ்க்கை எளிதானதல்ல; இது தனது வாழ்க்கையின் ஒரு அம்சமாகி விட்டதாகவும், இதிலிருந்து ஒரு போதும் விலகிச் செல்லப் போவதில்லை என்றும் கூறினார். "எனது சகோதரர்களும், சகோதரிகளும், நான் இங்கு என்ன செய்துகொண்டிருக்கின்றேன் என வியந்து கொண்டிருக்கலாம்; ஈழம் என்கின்ற தமிழ் நாடுதான் எனது வீடு. தமிழ் மொழியும் பேசக் கற்றுள்ளேன். (அவுஸ்திரேலியாவில் இருக்கும்) எனது பெற்றோர்கள், நான் திரும்பி வரமாட்டேன் என்பதை ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகின்றேன்" என்று கூறினார்.

"அவர்கள் (பெற்றோர்) என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் எனது நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் இதில் மிக நெருக்கமாக இணைந்துக் கொண்டுவிட்டேன். இந்தச் சமூகம் எனக்கு எவ்வளவு வேண்டியதாக இருக்கின்றதோ, அவ்வளவு இச்சமூகத்திற்கும் நான் வேண்டியவராக இருக்கின்றேன். கெரில்லாப் போரோடு வாழக்கற்றுக் கொண்டுவிட்டேன்." இடையில் இறுக்கமாக பிணைக்கப்பட்டிருந்த AK 47 துப்பாக்கி ரவைப்பட்டியைச் சரிசெய்தவாறு, "தமிழருடைய இலட்சிய வெற்றிக்காக நான் இறக்கவும் தயாராக இருக்கின்றேன்." என்று கூறினார். ●

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# கடலும் அதன் வளங்களும்

கட்டுரைத் தொடர் - 3

கடலில் இருந்து நாம் பெற்றுக் கெள்ளக்கூடிய பயன்களில், கடல் நீரிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருட்களையும், சக்திகளையும் பற்றி அறிந்தோம். அடுத்து கடல் நீரில் வாழும் உயிர்களைப் பற்றி இம்முறை பார்ப்போம்.

கடல்நீரில் வாழும் உயிர்களைப் பார்ப்போமாயின் அவற்றை இரண்டு வகைப்படுத்தலாம். அவை கடல் தாவரங்களும், கடல் விலங்கினங்களும் ஆகும். இங்கு முதலில் தாவரங்களைப் பற்றி நாம் பார்ப்போம்.

கடல் தாவரங்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்ளும்போது மிகவும் ஆச்சரியப்படக்கூடிய பல உண்மைகளை சமுத்திரவியலாளர்களும், தாவர ஆராய்ச்சியாளர்களும் கண்டுபிடித்துள்ளனர். கடல் தாவரங்கள் , கடற்கறகளில் படர்ந்திருக்கும் பாசியிலிருந்து, சுமார் 30 மீற்றர் உயரம் வளரும் பெரிய தாவரங்களும் உள. இத்தாவரங்கள் பெரும் காடுகளாயும் கடலினுள் உள்ளன.

பொதுவாக, கடற்பாசியை மீனினங்கள் உணவாக உட்கொள்ளுகின்றன என்பது எம்மில் அநேகருக்குத் தெரியும். ஆழம் குறைந்த கற்பாறைகளில் படரும் பாசிகளைத்தான் எம்மில் அதிகமானோர் நினைத்துக் கொள்வார்கள். இங்கு சிறு கற்பாறைகளில்வளரும் சிறு தாவரங்கள் மீன்களுக்கு உணவாக அமைவது மட்டுமல்லாது, சிறு மீன் இனங்களுக்கு பாதுகாப்பாகவும் அமைகின்றன. இதேவேளை பெரும் காடுகளாக வளர்ந்துள்ள தாவரங்கள், மற்றைய மீன்களைப் பிடித்துண்ணும் மீன்வகைகளுக்கு ஒளிப்பிடமாகவும் அமைகின்றன.

மிகவும் ஆச்சரியப்படக்கூடிய அடுத்த விடயம், பூமியில் சிறு உயிரினங்களைப் பிடித்துண்ணும் தாவரங்களைப் போன்று கடலிலும் தாவரங்கள் உள்ளன. இவை மறைவிடம் தேடிவரும் சிறு மீன் இனங்களைப் பிடித்துண்ணுகின்றன. மீனுக்கு உணவாகவும், மீனை உணவாக்குபவையாகவும் உள்ள தாவரங்களை விட, மனித இனத்திற்கு உபயோகப்படும் தாவரங்களும் கடலில் உள்ளன. இவற்றின் பயன்களும் குறிப்பாக மூன்று வகைப்படுத்தப் படுகின்றன. அவையாவன **உணவுவகை, மருந்துவகை, உரவகை** ஆகும்.

மனிதர்களுக்கு உணவாக்கப்படும் தாவரங்களும் கடல் நீரில் வாழுகின்றன. இவற்றை உலகில் ஒருசில நாடுகளில் உள்ள மக்களே உபயோகிக்கின்றனர். இதற்கு இருவகைக் காரணங்கள் உள்ளன.

முதலாவது, இத்தகைய தாவரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி இருத்தல் வேண்டும்.

இரண்டாவது, உணவுப் பற்றாக்குறை ஒரு காரணமாக இருத்தல் வேண்டும்.

இவற்றை எமது நாட்டில் வளரும் ஒருசில தாவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், முசுட்டை, கொவ்வை போன்ற தாவரங்களை ஒரு சிலர் உணவாக உட்கொள்வதைக் காணலாம். ஆனால் இத் தாவரங்களை எல்லோரும் எப்போதும் உட்கொள்வதுமில்லை, அதே போன்று எல்லா இடங்களிலும் அவை பெறக்கூடியதாயும் இல்லை.

அடுத்து மருந்து வகைகளுக்குப் பாவிக்கப்படும் தாவரங்கள்.

இவை பல வகைகளில் பாவிக்கப்படுகின்றன. பல விதமான மருந்து வகைகளில் இத்தாவரங்களை சேர்த்துக் கொள்கின்றனர். உதாரணமாக பிரான்சில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பால்மாக்களில், ஒரு சில விஷேடமான

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பால்மாக்களில் இவை சேர்க்கப்படுகின்றன. இது ஒரு சில ஆரோக்கியக் குறைவான குழந்தைகளுக்கே விஷேடமாகக் கொடுக்கப்படுகின்றது.

மேலும், தோல் வியாதிகளைப் போக்குவதற்கு செய்யப்படும் கழிகளிலும் இவை சேர்க்கப்படுகின்றன.

இத்தகைய தாவரங்கள் ஆழம் குறைந்த கரையோரக் கடற்பகுதிகளில், ஏக்கர் கணக்கிலே தோட்டங்களாக செய்யப்படுகின்றன. பின்னர் இத்தாவரங்கள் வளர்ந்தபின் அறுவடை செய்யப்பட்டு பதப்படுத்தி கைத்தொழில் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தகையவற்றை எமது நாட்டில் நாமும் செய்துகொள்ளக்கூடிய வசதிகள் உள்ளன.

உரவகைகளுக்குப் பாவிக்கப்படும் தாவரங்களில் எமது நாட்டில் பாவனைக்குப் பாவிக்கப்படும் சாதாளையை நாம் கவனத்தில் கொள்ளலாம். ஆனால் பெரும் காடுகளாக வளர்ந்திருக்கும் கடற் தாவரங்களை, தொன் கணக்கில் வெட்டியெடுத்து உபயோகிப்பது இன்று கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய பாவிப்பிற்கு எம்மை வளர்த்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை தற்போது எம்மிடம் இல்லாவிடினும், இவற்றை வளர்த்துக் கொள்ளவேண்டிய கட்டாய நிலை எமக்குத் தோன்றும்.

இத்தகைய வளங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தாவரங்களைப் பேணிப்பாதுகாப்பது எமது முக்கிய கடமையாகக் கருதவேண்டும். கடல் தாவரங்கள் அழியும்போது அல்லது அழிக்கப்படும்போது அதன் விளைவுகள் எமக்குப் பல தாக்கங்களை உண்டுபண்ணும். கடலில் மீனினங்கள் அற்றுப் போகும் தன்மை அல்லது இடம் பெயரும் தன்மை உண்டாகும். கடல் நீரோட்டத்துடன் அல்லது காலநிலை மாற்றத்துடன் மட்டும் மீனினங்கள் இடம் பெயர்வது மட்டுமல்லாது கடலினுள் அவை வாழக்கூடிய சூழ்நிலை அற்றுப்போகும்போது அவை அப்பிரதேசங்களில் அற்றுப்போகும் நிலை தோன்றுகின்றது. இது கடற் படுக்கைகளை அசுத்தப்படுத்துவதால், குறிப்பாக நிலத்திலிருந்து கடலையடையும் அசுத்தங்களால், கரையோரக் கடற்தாவரங்கள் அழிக்கப்படும் நிலை உண்டாகும். இவற்றிலிருந்து எம்மையும், எமது சூழலையும் பாதுகாப்பது எமது முக்கிய கடமைகளில் ஒன்றாக இன்று உள்ளது. ●

## குறும்பு

* தமிழ் மக்களுக்கு விடுதலை, புலிகள் ஆயுதமூலம் விடுதலையைப் பெற்றுக் கொடுக்க முயன்றுவருகின்றனர். ஆனால், அந்த விடுதலையை நான் அகிம்சை மூலம் பெற்றுக்கொடுத்தே தீருவேன்.

**பிரேமதாசா (வீரகேசரி 30.06,91,)**

* உள்ளூராட்சித் தேர்தலின்போது, ஐ.தே.கட்சிக்கு பெரும் வெற்றியைத் தேடித் தந்த மக்களுக்கு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில், எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**E.P.D.P செயலதிபர் டக்ளஸ் தேவானந்தா.**

* நடந்து முடிந்த தேர்தலில் எமது கட்சியின் அமோக வெற்றிக்கு உறுதுணையாய் இருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும், அதன் தலைவருக்கும், நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**- பிரேமதாசா.-**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இது அனைவரினதும் போராட்டம்

1977 ம் ஆண்டுக்குப் பின் கூர்மையடைந்த தமிழீழ விடுதலைப் போராட்டம், பல போராட்டக் குழுக்களைத் தோற்றுவித்தன. தமிழ் மக்களின் விடுதலை தான் அடிப்படை நோக்கம் என்று கூறிக்கொண்ட போதிலும் அணுகுமுறை, வழிப்படுத்தல், அமைப்பு முறை என்றவகையில் தம்மை மாறுபட்டவையாகக் காட்டிக்கொண்டு, அவை மூத்த இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வேறுபட்டு நின்றன. எனினும் 1987 யூலை மாதம் இலங்கை, இந்திய அரசுகளால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பின் (இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், போராளிகளையும் உரசிப் பார்த்த உரைகல்லாகக் கருதப்படுகின்றது.) ஒவ்வொரு இயக்கத் தலைமைகளும், மக்களாலும், அவ்வவ் இயக்கப் போராளிகளாலும் அலசி ஆராயப்பட்டன.

அணுகுமுறை, வழிப்படுத்தல், அமைப்புமுறை என்ற வகையில் மாத்திரம் வேறுபட்டு அல்லது முரண்பட்டு நிற்பது என்பதை விடுத்து, அவற்றின் இலட்சியத்தில், நோக்கத்தில் மாபெரும் வேறுபாட்டை, வியப்பிற்குரிய இடைவெளியை காணக்கூடியதாக இருந்தது. அதே வேளை அவற்றின் நோக்கத்தில் கணிசமானஅளவு சந்தேகத்தையும் தோற்றுவித்தது. ஒப்பந்தம் தோற்றுவித்த இந்தச் சூழ்நிலையானது, விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய குழுக்களின் கையாலாகாத நிலையை தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

இலட்சியத்திற்காகப் போராட்டம் என்பதை மறுத்து, எதிரியின் பலத்திற்கு மண்டியிடுகின்ற வாய்வீச்சுத் தலைமைகள் என்பதும்; தமது நலன்களுக்காக, பதவிகளுக்காக, சிறிது சிறிதாக வளர்த்தெடுக்கப்பட்ட எமது தேச விடுதலைப் போராட்டத்தை அன்னிய சக்திகளிடம் அடகு வைக்கத் துணிந்து நின்றதும், மக்களாலும் அவ்வவ் இயக்கப் போராளிகளாலும் இலகுவாக புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தன.

எல்லா இயக்கங்களும் எமது மண்ணின் விடுதலையை நோக்கியே போராடுகின்றன என்று முகிழ்ந்த நம்பிக்கையின் அடிப்படையில், வெவ்வேறு இயக்கங்களோடு பல ஆயிரக்கணக்கில் தம்மை இணைத்துக் கொண்ட இளைஞர்கள், யுவதிகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் தமது தவறை முழுமையாக உணர்ந்தகொண்டனர். தேசநலன் நோக்கி உயர்ந்த கரங்கள், தமது நலன்களை மட்டுமே கவனிப்பதான அவர்களின் சுயநலப் போராட்டத்தில் இருந்து ஒதுங்கிக்கொண்டன.

"எமது மக்களின் நலனிற்கு எதிராகச் செயற்படும் எவரும் எதிரிகளே; எமது தேசத்தை அழிக்க நினைக்கின்ற, அடக்கிஆள நினைக்கின்ற எத்தகு எதிரியையும் உயிரை விலையாகக் கொடுத்தாகிலும் எதிர்ப்போம்". இது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. இந்தவகையில் செயற்பட்டுவரும் விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனைய இயக்கங்களினுள் யூலை ஒப்பந்தம் முரண்பாடுகளை, அதிருப்திகளை, உடைவுகளை உருவாக்கியது என்பது வெளிப்படையான உண்மை.

சிறிய அடக்குமுறையாளனிடம் இருந்து, பெரும் அடக்குமுறையாளனிடம் சரணடைவதும் துரோகம் என்பது போராளிகளின் வாதம்; பொது எதிரியான சிறிலங்காவை மண்டியிடச் செய்ய வேண்டும் என்பதே முதல் நோக்கம் என்பது தற்குறிகளின் வேதம். இந்த வகையில் ஏராளமான போராளிகள் போராட்ட வாழ்க்கையில் இருந்து ஒதுங்கிக் கொண்டனர். அவற்றிற்கு ஆதரவு வழங்கிவந்த மக்களும் தமது ஆதரவை விலக்கிக்கொண்டனர். குருட்டுத்தனமான தலைமை விசுவாசிகளும், கூலிக்குத் துப்பாக்கி ஏந்துபவர்களும், அற்ப ஆசைகொண்ட அறிவிலிகளும் தவிர்ந்த ஏனையோர் துரோகத் தலைமைகளின் குருட்டு வழிகாட்டலில் நின்று தம்மை விடுவித்துக் கொண்டனர். யாரிடம் இருந்து எமது மக்களையும், எமது மண்ணையும் பாதுகாக்கப் போராடுகின்றோம் என்று கூறிக்கொண்டார்களோ, அவர்களிடமே சென்று தமது பாதுகாப்பை, இத் துரோகத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தலைமைகள் உறுதிப்படுத்திக்கொண்டன.

1983 ம் ஆண்டு காலப் பகுதிகளிலே தமிழீழப் பகுதிகளில் இயக்கங்கள், குழுக்கள் என்ற வகையிலே முப்பத்திமூன்று அமைப்புக்கள், தமிழ்மக்களின் நலன்களுக்காகவும், விடிவிற்காகவும் போராடுகின்றோம் என்று தம்மைப் பிரகடனப்படுத்திக்கொண்டன.


1987 யூலைக்குப் பின் தமிழீழப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தவிர்ந்த வேறு எந்த இயக்கமோ, குழுக்களோ செயற்படவில்லை. மிகக் குறுகிய காலத்திலேயே மக்கள் மத்தியில் இருந்து அவை அன்னியப்பட்டன. தேசநலன் கருதி போராடிய போராளிகள் விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டனர். மக்களுக்காகக் போராடுகின்ற புலிகளை மக்கள் நேசித்தனர். தம்மைக் காத்துநின்ற புலிகளை மக்களே காத்துநின்றனர்.

1990 மார்ச் 31 இல் இந்தியப் படையின் முற்றான வெளியேற்றத்தின்பின், விடுதலைப் புலிகள் மீதான, ஏனைய குழுக்களில் இருந்து விலகிக் கொண்ட அல்லது விலக்கப்பட்ட போராளிகளினதும், அவர்களை ஆதரித்து நின்ற ஆதரவாளர்களினதும் பார்வை, கணிப்பு ஆரோக்கியமானதாக இருந்தது. விடுதலைப் புலிகள், தமது இலட்சியத்தின் மீது கொண்டுள்ள நெகிழ்வற்ற இறுக்கமான ஈடுபாடு அவர்களை ஈர்த்துக் கொண்டதில் வியப்பில்லை.

இந்த வரலாற்று ஓட்டத்தில், தமிழீழத்தின் தேசியத் தலைமையை, தேசியப்படையை உருவாக்கும் பணியில், விடுதலையின் பால் நேசம்கொண்ட அனைத்துத் தமிழீழ மக்களும் தம்மை இணைத்துக்கொண்டு செயலாற்றிவருகின்றனர். இந்த நிலையில் ஏனைய குழுக்களில் இருந்து விலகி விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடும் போராளிகளை சந்தர்ப்பவாதிகளாக, தனிமைப்பட்டுநிற்கும் துரோகத் தலைமைகள் வர்ணிக்கின்றபோதும், தமது பாதையைச் சீர்செய்துகொண்ட தேசாபிமானிகளாகவே விடுதலைப் புலிகளும், மக்களும் அவர்களைக் கருதுகின்றனர். இத்தகைய மாற்றங்கள் , வெளிநாடுகளில் வாழுகின்ற இயக்க ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் மத்தியில் தோன்றியிருப்பது, போற்றுதற்குரியதும், வரவேற்க வேண்டியதுமான நல்ல அறிகுறியே.

சில இயக்கங்களிற்காக கடந்த காலங்களில் தீவிரமாக உழைத்த உறுப்பினர்கள், இன்று போராட்டத்தின் திசையை, வீச்சை உணர்ந்து தேசியப் படையின் கட்டுமானத்திற்கான பணியில் தம்மை இணைத்துக் கொள்ள முன்வந்திருக்கின்றனர். தலைமைகளால் ஏமாற்றப்பட்டு, பிழையாக வழிநடத்தப்பட்ட இவர்கள், விடுதலைப் போராட்டக் கரங்களைப் பலப்படுத்த முனைவதை சந்தர்ப்பவாதமாகக் கருதிவிட யாராலும் முடியாது. அது அவர்களது அரசியல் சித்தாந்தத் தெளிவையும், தேச விடுதலையை நேசிக்கின்ற மன உந்துதலையும், மாசற்ற உணர்வுகளையுமே வெளிப்படுத்தி நிற்கின்றன.

சிலர் தமது தவறுகளை எண்ணி வேதனையுடனும், சங்கடத்துடனும் ஒதுங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அப்படி ஒதுங்கியிருப்பதை விடுத்து, எமது மண்ணிற்கான, எமது மக்களுக்கான தேச விடுதலைப் போராட்டத்தில் பங்குகொள்ள அவர்கள் கடந்தகால கசப்பான வாழ்க்கையை மறந்து தெம்பாக எழுந்து வரவேண்டும். பல்லாயிரம் கைகள் அவர்களது கைகளைத் தோழமையுடன் பற்றிக்கொள்ள காத்திருக்கின்றன. ●




## இந்த நிலை

## மாறுமா ?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





களத்தில் புலிகள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கலிபோர்னியாவில் சிங்களப் பயங்கரவாதம்

கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் சாக்ரமெந்தோ வளாகத்தில் நடைபெற உள்ள மாநாடு ஒன்றைக் குழப்பும் முயற்சியில் அமெரிக்காவில் உள்ள சிங்களக் குடியேற்ற வாதிகளும், வேறுசில சிங்கள வதிவாளர்களும், பயங்கர உத்திகளைக் கையாண்டு வருகின்றனர். சர்வதேச பங்களிப்புடன் கூடிய இந்த மாநாட்டை, கலிபோர்னியா பல்கலைக்கழகமும், உலகத்தமிழர் ஒன்றியமும் இணைந்து "நாடு இல்லாத தமிழ் மக்கள்" என்றதலைப்பில் நடத்த உள்ளன.

இந்த மாநாடு யூலை 20 ம் திகதியும் 21 ம் திகதியும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற உள்ளது. மேலும் விவாதத்திற்கு 12 தலைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அநேகமான தமிழர்கள் அல்லாத கல்விமான்களும், தனிதொழில் தகைமையுள்ளவர்களும் தமது ஆராய்ச்சிக்கட்டுரைகளை இதற்குச் சமர்ப்பித்துள்ளனர்.

தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளையும், அவற்றின் அங்கீகாரத்தையும் இந்த மாநாடு நிலைநாட்டும் என்ற பயத்தில் சிறீலங்கா அரசானது, இம் மாநாட்டை ரத்து செய்யும்படி கேட்டுள்ளது. ஆரம்பத்தில் தன்னை ஐக்கிய அமெரிக்காவின், சிறீலங்கா ஸ்தானிகர் என அடையாளம் காட்டிக்கொண்ட ஒரு தனிநபர் தொலைபேசி மூலம் இந்த வேண்டுகோளை விடுத்தார். இந்த மாநாட்டை ஒழுங்கு செய்தவர்கள் லில் இருவர் பயங்கரவாதிகள் என்று வலியுறுத்தி, அதன் அடிப்படையில் இம் மாநாடு ரத்து செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். இந்தக் குற்றச் சாட்டில் எந்த உண்மையும் இல்லை என்பதை கண்டுகொண்ட பல்கலைக்கழக மேலதிகாரிகள், தமது வளாகத்தில், சிறீலங்கா அரசின் தலையீட்டை அங்கீகரிக்கவில்லை.

இந்தமாநாட்டிற்கான எதிர்ப்பை சிங்களக் குடியேறிகள் நிறுத்தவில்லை. பல்கலைக்கழகத்திற்கு பல மிரட்டல் அழைப்புகள் வரத் தொடங்கின. திரு. வோல்டர் ஜெயவர்தன என்பவர், மாநாட்டைக் குழப்புவதற்கு சகல வழிகளையும் கையாளப் போவதாக அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் விடுத்துள்ளார். திரு. திலக் பீரிஸ் என்பவர் பஸ் வண்டியில் (5000 அளவில்) எதிர்ப்பாளர்களை மாநாட்டிற்கு கொண்டுவரப் போவதாக மிரட்டியுள்ளார். அமெரிக்காவில் உள்ள அநேக சிங்களத் தொழிலாளர்கள் பல்கலைக்கழகத் தலைவருக்கும், கலிபோர்னியா மாநில ஆளுநருக்கும், மற்றைய பல்கலைக்கழக அங்கத்தவர்களுக்கும் எதிர்ப்புக் கடிதங்களையும்,பயமுறுத்தல் கடிதங்களையும் அனுப்பியுள்ளனர்.

தமக்குவரும் இந்த மிரட்டல்கள் தமிழீழத்தில், சிறீலங்கா அரசால் நடத்தப்படும் பயங்கரவாதம் போன்று இவையும் உள்ளன என்று மாநாட்டின் அமைப்பாளர்கள், பத்திரிகைச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளனர். இந்த முயற்சிகள் சிறீலங்கா அரசு சிறுபான்மை மக்களின் பேச்சுச் சுதந்திரத்தைத் அழிப்பதற்கு எத்தகைய வழிகளை தமது சொந்த நாட்டில் மட்டுமல்ல, தனிமனித சுதந்திரத்தைப் பேணுகின்ற மற்றைய நாடுகளிலும் கையாளுகின்றது என்பதைக் காண்பிக்கின்றது.

தமிழீழ நாட்டின் சுதந்திரம், அங்கு அமைக்கப்படவுள்ள அரசாட்சிமுறை, பொருளாதாரத் தன்னிறைவு, தமிழீழ வங்கி ஆகியவை குறித்தும், தமிழீழத்தின் பண்டைய வரலாறு, குடியேற்ற ஆட்சிக்கால, அதன் பிற்பட்டகால அடக்குமுறை வரலாறு ஆகியவை பற்றியும் பல்நாட்டு அறிஞர்கள் இம்மகாநாட்டில் ஆராயவுள்ளனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## இனப்படுகொலை (Genocide)

1948 ம் ஆண்டு உருவான இனப்படுகொலைச் சட்டத்திற்கு (Genocide Convention) அமைய, இனப்படு கொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றமாக (Crime against humanity) ஆக்கப்பட்டது. அமைதிக்காலத் தில் நடைபெற்றாலும், போர்க்காலத்தில் நடைபெற்றாலும் இனப்படுகொலை சர்வதேச சட்டங்களின்படி குற்றமாகக் கருதப்பட்டு, அதனை தடுப்பதற்கும், அதனைப் புரிந்தவரைத் தண்டிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இனப்படுகொலை ஒரு அரசாங்கத்தால், தனது சொந்த நாட்டில், தனது குடிமக்களுக்கு எதிராக நடத்தப்பபட்ட போதிலும், அது அந்நாட்டின் உள்நாட்டுச்சட்டவரம்பிற்கு உட்பட்டதல்லவென்றும், அது சர்வதேச விவகாரம் என்றும் ஐயந்திரபற நிர்ணயிக்கப்பட்டது.

இனப்படுகொலைச் சட்டத்தின் 11 வது விதியின் பிரகாரம் ஒரு தேசிய இனத்தவரையோ அல்லது இனத்தவரையோ அல்லது ஒரு மதப்பிரிவினரையோ முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதற்கு எடுக்கும் பின்வரும் செயற்பாடுகளே இனப்படுகொலை ஆகும்.

(அ) அச்சமூகத்தவரின் அங்கத்தினர்களைக் கொலைசெய்தல்.

(ஆ) அச்சமூக அங்கத்தவர்களுக்கு உடல்ரீதியாகவோ உளரீதியாகவோ பாரதூரமான கெடுதலை விளைவித்தல்.

(இ) அச்சமூகத்தவரை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்குடன் அதற்கான வாழ்க்கைச் சூழ்நிலையை திட்டமிட்டு ஏற்படுத்துதல்.

(ஈ) அச்சமூகத்தவரிடையே பிள்ளைப்பேறுகள் ஏற்படாமல் தடுத்தல்.

(உ) ஒரு சமூகத்தைச்சேர்ந்த பிள்ளைகளைப் பலவந்தமாக மற்றச் சமூகத்தவராக மாற்றுதல்.

## கொக்கட்டிச்சோலை இனப்படுகொலை

திட்டமிடப்பட்ட முறையில் தமிழினப் படுகொலையை காலத்துக்குக் காலம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் சிறீலங்கா இனவாத அரசு, அண்மைக் காலங்களில் வடபகுதியில் தமது இன அழிப்பு நடவடிக்கைகளை பாரியஅளவில் அமுல்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ள போது, தென் தமிழீழப் பகுதியில் வாழ்கின்ற அப்பாவி தமிழ் பொதுமக்கள் மீது, தமது மிலேசத்தனமான வக்கிரங்களையும், கொடூரங்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

12, 13.06.91 ஆகிய இரு தினங்களில் தென் தமிழீழத்தைச் சேர்ந்த கொக்கட்டிச் சோலைப் பகுதியில் சுமார் 166 ற்கும் அதிகமான அப்பாவி தமிழர்களை சிங்கள அரசு கொன்று குவித்தது.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட ஒரு கிராமத்தில் 130 ற்கும் மேற்பட்டவர்களும், மற்றைய கிராமத்தில் 36 ற்கும் மேற்பட்டவர்களும் இராணுவ பயங்கரவாதத்திற்கு பலியாகியுள்ளனர்.

அடித்தும், கூரிய ஆயுதங்களால் வெட்டியும், மிருகத்தனமான முறையில் இராணுவம் தனது வெறியாட்டத்தை நடத்தியுள்ளது. சுமார் இருபது மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர்ந்த இவ் அராஜகநடவடிக்கையின் முடிவில் சடலங்கள் எரிக்கப்பட்டும், புதைக்கப்பட்டும் உள்ளன.

அதேவேளை இப்பகுதியிலுள்ள அரிசி ஆலை ஒன்றிலிருந்து 47 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் 16 சடலங்கள் முற்றாக எரியாத நிலையில் காணப்பட்டன. 400 ற்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டு முற்றாக சேதமாக்கப் பட்டன. பல பெண்கள் இராணுவத்தின் பாலியல் வன்முறைக்கு பலியான பின்னரே கொலை செய்யப் பட்டனர் என்றும், கொலை செய்யப்பட்டவர்களில் 50ற்கு மேற்பட்ட சடலங்களை இராணுவத் தின் பலாத்காரத்தின் பேரில் தாங்களே குழிதோண்டிப் புதைத்ததாகவும், இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தை தொடர்ந்து, சிறீலங்கா அரசு உலகை ஏமாற்றுவதற்காக போலியான விசாரணைக் குழு ஒன்றை அமைத்துள்ளதாக அறிவித்தது. இதுவும் கடந்தகால விசாரணைக் குழுக்கள்போல் எந்தவிதமான பயனுமளிக்காத வெறும் வெற்று விசாரணைக் குழு என்பதும் தெரிந்ததே.

இச் சம்பவத்தின் சூத்திர தாரியான சிறீலங்கா அரசு மறுபுறத்தில் 'சமாதானம் - அமைதி' என்ற தனது நாடகபாணி வசனத்தை திரும்பத் திரும்ப ஒப்புவித்துக் கொண்டிருக்கின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# யுகராகங்கள்



சிறுகதை

ஆறுமுகத்தார் வீட்டின் முற்றத்தில் நின்றுகொண்டிருந்தார். அவரின் பேரப்பிள்ளை விளையாடிக்கொண்டிருந்தாள். சீதா மெல்லிய பட்டுப் போன்ற பொன்னிற இறக்கைகளை அடித்துப் பறக்கும் தட்டான் பூச்சியின் பின்னால் ஓடி, செவ்வரத்தைப் பூமரத்தைக் கடந்து, மெல்ல அதன் அருகில் கைகளை நீள நீட்டி, கூட்டிச் சேர்த்துப் பிடிப்பதற்குள் அது பறந்து விட்டது. ஏமாற்றம் அவள் விழிகளில் சுழல அடி வளவிற்குள் நின்று முற்றத்தைப் பார்த்தாள். நீதி, ஆறுமுகத்தாரின் வீட்டின் திண்ணையில் உட்கார்ந்திருக்க அவனது கண்கள் குழந்தையின் மண் ஒட்டி செல்லும் பாதங்களைத் தொடர்ந்து, தூரத்தே ஒரு கிறுக்கு கிறுக்கி, மேலே பனைமரத்தை தொட்டு கீழிறங்கி ஓடி ஒரு புள்ளியாய் மறைந்த தட்டான் பூச்சியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

"என்னடா தம்பி நீதி! இப்படியிருக்கிற பேயறைந்தவன் மாதிரி. வா தம்பி, உந்தச் சந்திவரை போயிற்று வருவம்."

அவனோ நீள நினைந்த வண்ணமாய் குத்துக்கல்லைப் போல இருந்தான்.

"அட எழும்பு தம்பி! நல்ல காத்து வீசுது, சோழகக் காத்து..." சோ என்ற இரைச்சலோடு காவோலை காற்றைக் கிழித்துக் கொண்டு விழுந்தது. சற்றுத் தள்ளி புல்லைக் கடித்துக் கொண்டிருந்த ஆட்டுக்குட்டி "ம்மே - ஏ - ம்மே - ஏ - -" என்று கத்திக் கொண்டு ஆறுமுகத்தாரின் கால்களில் வந்து முட்டியது. பின்பு சுத்திச் சுழன்று உடலை தேய்த்துக்கொண்டு நின்றது. மண் காவி படிந்து சிறு பொத்தல்கள் விழுந்த நான்கு முழ வேட்டியை சண்டிக்கட்டாக கட்டிக் கொண்டு ஆறுமுகத்தார் வீதியை நோக்கி நடந்தார். நீதி அதிக காலங்களுக்கு பின்னர் அந்நிய தேச வாசத்தின் இடையே சில நேரங்கள் சொந்த மண்ணில் ..... ஆழ்ந்த மாலைப் பொழுதில்........ நீதியும் உடம்பை முறித்துக் கொண்டு எழுந்து போனான்.

பிய்ந்து கிடக்கும் கிடுகு வேலி. வீட்டுச் சுவரெங்கும் சன்னங்கள் தைத்திருந்தன - அம்மைத்தழும்புகள் போல. குன்றும் குழியுமான தெருவீதி. அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

நீதி "ஆ...!" என்று தனது வலது காலைத்தூக்கினான். உள்ளங்காலில் இருந்து இரத்தம் கசிந்தது.

"என்னடா தம்பி குத்தினது?" உருக்கமாக வினாவினர். "இரும்புத் துண்டு போல கிடக்கு" வலியோடு சொன்னான்.
"பார்த்து நடவடா தம்பி. இது தான் அந்த கிறனைட் துண்டுகள்" ஆறுமுகத்தாரின் அனுபவங்கள் தனக்கு இல்லாது போனது கண்டு வெட்க உணர்வு அவனுள் எழுந்தது.

"போன வருஷம் இதில ஆமிக்கும் எங்கட பிள்ளையளுக்கும் சண்டை நடந்தது. பயங்கரச் சண்டை! சனங்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கள் அந்தப் பனங் கூடலை அண்டி ஓடி ஒழிஞ்சுதுகள் தம்பி" என ஆறுமுகத்தார் சொல்லிக் கொண்டு நடந்து கொண்டிருந்தார்.

நடந்து செல்லும் வழியில் சின்ன குளக்கட்டு; அதனருகில் ஒரு கல் வீடு; அதன் யன்னல்கள் உடைந்து கிடந்தன. முற்றம் குப்பையும் கூளமுமாய் கிடந்தது. படலை "ஓ" வென்று திறந்தபடி கிடந்தது. "இந்த வீட்டில் இப்போ யாருமில்லையா?" கலக்கத்தோடு நீதி கேட்டான் .

"இப்படித்தான் மோனே இந்திய இராணுவம் அமைதி காத்தது..!! ம் இப்படி எத்தனை இடியும் புயலும்....! அதை ஏன் ராசா கேட்கிற...?"

அந்த மாலைப் பொழுதில் சூரியன் தனது செங்கதிர்களை விரித்தபடி உயரிய பனைக் கூடலின் உள்ளே ..... மௌனமாய் சோகக் கதை பேசும் ஒவ்வொரு அழியாச் சுவடுகளையும் பார்த்துக் கொண்டு நீதி அவரின் பின்னால் நடந்தான்.

ஊன்று கோலின் உதவியுடன் முதுகைக் கூனிக் கொண்டு நிலம் பார்த்து நடந்து அவர்கள் எதிரே முத்தாச்சிக் கிழவி
"என்ன ஆறுமுகம்.... எங்க இங்கால....?"
"இவன் தம்பியோட....."

"ஆரு தம்பி....?" அறிகின்ற ஆவல் மிகுதியால் கேட்டாள்.
"எங்கட நல்லம்புட மகன் தான். உனக்கு இரத்த உரித்தாச்சே!"
" தம்பியே! என்னடா தம்பி ஆத்தை உயிரோட இருக்கிறாளா செத்திட்டாளா எண்டா பார்க்க வந்தனி?"
முத்தாச்சி அப்படிக் கேட்டதும் அவை எறிகணைகளைப் போல அவன் இதயத்துள் விழுந்து வெடித்தது.
நீதி பதிலேதும் கூறாது சிரிக்க மட்டும் செய்தான்.
முத்தாச்சிக் கிழவி ஊன்று தடியின் உதவியுடன் கூனிக் கொண்டு தனது குடிசையை நோக்கிச் சென்றாள்.

மூங்கில் துளைகளினூடு காற்று உரசி எழும் இனிய நாதத்தையும் விட கூடிய சுகத்தோடு ஆத்மாவை வருடிச் செல்லும் கீர்த்தனமாக, வேப்பமரக்காற்று நீதியின் மேனி தழுவி, இனிய உறவின் கதை உச்சரித்தது. மனிதர்களுக்குத் தலையில் முட்டி விடக்கூடாதே என்பதற்காக அந்த வேம்பின் கிளைகள் தலையை மருவிக்கொண்டு நின்றன. ஆறுமுகத்தாரும் நீதியும் அந்த வேப்பமரத்தடிக்கு வந்தார்கள். அங்கே அம் முச்சந்தியில் ஒரு ஆயுள்வேத வைத்தியநிலையம், ஒரு மகாவித்தியாலயம், பெரிய கடை, தேனீர்கடை, சைக்கிள் கடை, வாசிகசாலை என்பன இருந்ததற்கான சிதைவுகளே காணப்பட்டன. ஆறுமுகத்தார் கண்களால் எல்லாவற்றையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு "இந்தமரத்தைமட்டும் ஒன்றும் செய்யவில்லையடா" என்று சொல்லி உள்ளம் தகித்திருக்க நின்றார்.

வேப்பமரத்துக்கு கீழே கிடந்த பாறாங்கல்லின் மேல் நீதி அமர்ந்து கொண்டான். "வேப்பமரக்காத்தில குளிச்சா சுகமாயிருக்கும்" என்று கூறியபடி வேப்பமரத்தின் பெரிய வேரொன்றில் ஆறுமுகத்தாரும் அமர்ந்து கொண்டார்.

"இந்த வேப்பமரத்தடியில ஒரு கொடூரம் புதைஞ்சு கிடக்கு"

வேப்பமரத்துக்கு சற்று தொலைவில் பெரிய குடில் ஒன்று தனது பல்லாயிரம் கண்களால் வானத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தது. வானம் பெய்ய நனைந்தும் காற்று வீச அசைந்தும் தடுமாறி நின்றுகொண்டிருந்தது.

ஆறுமுகத்தார் கையைநீட்டி சுட்டு விரலால் "அதோ அந்தக் கொட்டகை...." அவன் விழியின் பார்வையுள் விழும்வரை ஆறுமுகத்தார் அவனுக்குக் காட்ட முயன்றுகொண்டிருந்தார். "அந்தா நிக்குது ஒற்றைப்பனை, அதுக்குப்பக்கத்திலதான்...." வெட்டவெளியைத் தொட்டு முடிகிறாப்போல வானம் இருந்தது. பட்சிகள் தத்தமது கூடுகளை நோக்கி பறந்துகொண்டிருந்தன. உள்ளங்கையின் ரேகைகள் கண்ணுக்குத் தெரியாத மங்கல் பொழுது. காகங்கள் கரைந்தன. தொலைவில் இருந்த ஆலமரத்திலும், சுற்றிவர இருந்த பனைக்கூடலிலும் வேப்பமரத்திலும் மறைவதும் எழுவதுமாய் குருவிகள் கூச்சலிட்டன.

"ஓம், அந்தக் கொட்டகை தெரிகிறது" என்றான் நீதி.
"உன் பள்ளி சினேகிதனாக்கும்; உனக்குத் தெரியுமா மோனே?" பெருமூச்செறிந்தவாறு பீடியை பற்றவைத்துக் கொண்டார். முகத்தைச் சுருக்கிக் கொண்டு "மறந்திட்டன்" யோசித்துக்கொண்டே சொன்னான்.

"மறந்திட்டியே...!!!?" ஆறுமுகத்தார் சிறிது சத்தமாகக் கேட்டார்.
"ஓடியும் பாடியும், ஒருமித்து நிலாப்பார்த்து சோறுண்டும் பால்ய சினேகிதனாய் இருந்தவனை மறந்திட்டியே" அவர் உள்ளத்துள் அப்படிக் கேட்டார்.
சற்று சினம் தணிந்து அவனுக்குப் புரியவைப்பதற்காக "அட.. ஊரில இதுதான் ஒரு செக்காலை அப்பயடா மோனே. "அப்ப பின்நேரங்களில நிழலுக்கு வேப்பமரத்தைச் சுற்றி ஒரே கூட்டமாக இருக்கும். பிள்ளையள் எல்லாம் ஓடி விளையாடுவினம். ஏன் நீ எல்லாம் கிட்டிப்புள்ளடிச்சு விளையாடின இடமெல்லா இதெல்லாம்; அட என்னடா மோனே...." என ஆச்சரியத்தோடு இமைகளை அகல திறந்து விழித்தார்.
"எங்க நான் இங்க கனகாலம் இருந்தாத்தானே....." வருத்தமுற்று அவன் சொன்னான்.
"சரி அந்த செக்காலையை திருப்பி ஒருக்காப்பார் தம்பி" நீதி பார்த்துவிட்டு... " என்ன நடந்தது சொல்லுங்கள்" ஆதங்கத்தோடு கேட்டான்.

குரலை செருமிக்கொண்டு ஆறுமுகத்தார் "அந்த

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


வாசன் வந்து தம்பி பெரிசா படிச்சது கிடையாது. (பெரிய அரசியல் எதுவும் அவனுக்குத் தெரியாது.) பெரிய பணக் காரன் ஆகவேணும் எண்டு நினைச்சதில்லை. ஆனா இந்தச் செக்கை பல்லாயிரம் தரம் சுற்றி வந்திருப்பான். அது எங்கள் எல்லாற்ற வயிற்றையும் நிரப்பியது." பரீட் சயமாயிற்று...."

"அவன் நல்லா பாடுவான் தம்பி. அவன் செக்குத்துலா வடியில இருந்து பாடினா அந்த நிலாக்கால இரவில் கேட்டுக்கொண்டேயிருக்கலாம். அவனுக்கு சொந்த பந்தமெண்டு யாருதான் இருந்திச்சினம் தம்பி"

"ஒரு நாள் தம்பி நல்ல வெய்யில்; சித்திரை வெய்யில்; நடு மத்தியானம்; அண்டங்காகங்கள் இந்த வேப்பமரத் தில இருந்து கோடைக்கத்தல் கத்தின. திடீரென்று ஓரே பரபரப்பு! சந்திக் கடைக்காரர் கடையை இழுத்துப் பூட்டினார்! சந்தியில் நிண்ட நாயளெல்லாம் அடிச்சு வைச்சு குரைக்க ஓரளவு விசயம் தள்ளியிருந்த ஊர்மக் களுக்கும் விளங்கிச்சு. ஜீப் வண்டியின் சத்தம் மெது வாக கேட்டுக் கொண்டிருக்க தொம் தொம் என்று ஆமி குதிக்கின்ற சத்தம். வேற ஒரு பத்துப் பதினைந்துபேர் துவக்குகளோட உந்த செக்காலைப் பக்கமாக தம்பி! மத்தியானம் சாப்பிட்டிற்று செக்காலை வாசலில படுத் துக்கிடந்தவன் வாசன்...!

"வந்தவங்கள் செக்காலை வளவுக்குள்ளதான் போனாங் களடா. சப்பாத்துக்காலுகளால உதைச்சு அவனை எழுப்பி ஆமிக்காரங்கள் அவனிட்ட மகனே அடையாள அட்டை கேட்டாங்கள்"

"சூத்திரம் மாதிரி இந்த மண்ணில சுற்றி வந்தவனிட்ட, பிறந்து வளர்ந்து தவழ்ந்து ஊர்ந்து நிமிர்ந்த அவனிட்ட, ராசா எங்கோ இருந்து வந்தவர்கள்...!!" சற்றே நிறுத் தினார் மீண்டும் தொடர்ந்தார்.

"இது தம்பி அவன்ற மனசில நெருப்பை மூட்டி விட்டுது. இப்படியிருக்கிறப்போ ஒரு நாள் மம்மல் பொழுதில வேப்பமரத்தடிக்கருகில மேளம், உடுக்கை தாள வாத் தியங்களோட எங்கிட பிள்ளையள் வந்திச்சினம்..." என்று கூறிவிட்டு ஆறுமுகத்தார் வேப்பமரத்து உச்சி யினூடாக நிலவு பொழியும்வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த இளம் போராளிகளைப் பற்றிய நினைவில் இருந்து மீண்டு "அட தம்பி மார்கழி மாதத்தில திருவெம் பாவ தினத்துக்காக, திருப்பள்ளி எழுச்சி பாடி அதிகா லையில் துயிலெழும்பிச் செல்வார்களே அதுபோல இங்க அனுதினமும் விடுதலை எழுச்சிப் பாடல்கள் பாடுவாங்கள் பொடியள்".

"ஒரு நாள் உடுக்குச் சத்தமும் பாட்டுச் சத்தமும் கேட்டு வேப்பமரத்டிக்கருகில ஊர் சனங்களெல்லாம் கூடினாங்க." அவர்கள் பாடிப்பாடி ஆடினார்கள். உடுக் கின் நாதம் உயிரைஉலுப்பிற்று. வாசனுக்கு அந்தப் பாடல்கள் ஆழமாய் மனசில பதிந்து போச்சு. எல்லோ ரும் நதியில் நீராடிச் செல்வது போல புதுப் பொலி வோடு தங்கிட வீடுகளை நோக்கிப் போச்சினம்.

"அண்டு இரவு துலாவடியில இருந்து வாசன் பாடினான் தெருக்கூத்தில் பாடின அதே பாட்டை ராகம் பிசகாமல் உரத்து. உச்சத் தாயியில் பாடினது சிறிது தள்ளி தங்கி யிருந்த தம்பியங்களுக்கு கேட்டுவிட்டது. கனகச்சித மாய் பாடினதை வியந்து அவனைத் தங்களோட வரும் படி கேட்டார்கள். இவன்ற நெஞ்சில் ஏற்கனவே நெருப்பு மூண்டிருந்தது எண்டு சொன்னேனே. வாசன் பெரிய சந்தோசத்தோட அவர்களோட இணைஞ்சுகொ ண்டான்."

"ஊரைச்சுற்றி வந்து எண்ணை விற்றுவிட்டு மாலையில் தோழர்களோடு தெருத்தெருவா திரிஞ்சு விடுதலை எழுச்சிப்பாடல் பாடிக்கொண்டு திரிந்தான். ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தான். உள்நின்று உருகி ஒரு ஒப்பில்லா ஆனந்தத்துடன் அவன் கூத்து இன்னும் என் கண்களில...." சொல்லிக்கொண்டே இருக்க ஆறுமுகத்தாரின் கண்களில் நீர் சொரிந்தன. கைகளால் துடைத்துவிட்டு கணநேரம் அந்தப் பால்வெளியை வெறித்துப் பார்த்த வண்ணமாயிருந்தார். கோளங்களின் உரசல்கூடக் கேட்கும் ஒரு அர்த்தமயான அமைதியில் வேப்பமரம் காற்றுக்கு சிலிர்த்ததால் பூக்கள் சொரிந் தன. குருவிகள் விடு, விடு என இறக்கைகளை அடித்து மீண்டும் தம் இருப்பை உறுதி செய்து கொண்டன. ஆறுமுகத்தாரும் நீதியும் எழுந்து நடந்து செக்கா லையை நோக்கி நடந்தார்கள்.

"இப்படியிருக்கின்றபோது ராசா இந்திய இராணுவம் வந்திச்சு. அமைதி காக்கிறம் எண்டு சொல்லித்தான் வந்தவங்கள். ஊருக்குள்ள வந்தவுடனே அவங்களோட வால் பிடியள் தோல்பிடியள் எல்லாம் சேர்ந்து கொண் டினம். இராணுவம் தானே - சிங்கள இராணுவத்திற்கும் மேலாக - தோட்டத்துப் பாத்திக்குள்ள தண்ணிவிட்டுக் கட்டின மாதிரி - திரும்பின இடமெல்லாம் இந்தியனாமி."

"இந்த வாசன் தம்பி வந்து தெருக்கூத்தில பாடிக்கொ ண்டு திரியிறவன்தானே, இரவோட இரவா அந்தச் செக்காலையை இந்திய இராணுவம் சுற்றிவளைச்சுப் போட்டாங்கள். மக்கள் படையெண்டு வந்தவையும் சேர்ந்து நிண்டுதான் இவ்வளவும். சனங்களுக்குத் தெரியாம குற்றவாளி எண்டு சொல்லி நடுச்சாமத்தில் அவையின்ர மன்று கூடி பலத்த விசாரணை."

"'நீ புலியாடா?' அவன் ஒன்றுமே பேசவில்லை. இந்திய இராணுவத்தைத் தோட நின்று அவனுக்கு மோசம் செய்ய வந்தவர்களை அவன் ஒரு பார்வை பார்த்தா னாம்."

"அவனை அடிச்சு மிதிச்சு 'பாடடா' என்று திமிராக கேட்டார்கள். அவன் பாடல்லே தம்பி."

'நீ தெருக் கூடத்தில நல்லா பாடுவியாமே பாடடா' மீண்டும் உதைச்சுப் போட்டு 'மரம் மாதிரி நிற்கின் றான்ரா' படு தூசனத்தால ஏசினாங்கள். ஆத்திரமும் கோபமும் பீறிட மிருகம் ஒன்று ஓங்கி அறைந்தது. இன்னொன்று பாய்ந்து அவனின் முதுகில் குத்தியது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பெரும் வலியோடு திரும்பியபோது ஒருவன் எட்டி தலையில் பிடித்து உதைக்க, இந்திய இராணுவம் நான்கு ஐந்து பேரும் சேர்ந்து அடித்தார்கள் தம்பி. "இன்று போலவே அன்று நிலா எறித்திருந்தது. சுற்றிலும் மயான அமைதி. செக்கு சுழன்று அபசுரமாய் ஒலித்தது. கேலியும் கிண்டலும் கூச்சலுமாக அவங்கள் நின்றாங்கள் பரிகாசக்காரர்கள்! கிறிஸ்துவுக்கு இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னா பின்னா வாழ்ந்து கொண்டிருக்கிறோம் தம்பி! அப்படித்தான் யோசிக்க வேண்டிக்கிடக்கு. எழும்பி நடக்கக் கூட முடியாமல் அவன் செக்கில் தொங்கியபடி விழுந்து கிடந்தான். இந்திய இராணுவம் அப்படியே விட்டிற்றுப்போக அலுகோசுகள் ஐயோ அவனைச் சுட்டுக் கொண்டாங்க தம்பி". தன் பிள்ளையை இழந்து துயரில் துவண்டுபோய் நின்ற ஆறுமுகத்தாரின் முகத்தைப் பார்க்க முடியாது நீதி தலை குனிந்து நின்றான்.

"துவக்குச் சத்தம் தம்பி அந்தச் சாமத்தில், அந்தக்காத்துக்கு ஊரில் ஒவ்வொரு வீட்டுக்குள்ளேயும் மோதியது ....... தம்பி.

"அவன் தெருவில் பாடியிருக்கிறான் கேட்டிருக்கிறம். எங்களுக்கெல்லாம் பெரிய உண்மை சொல்லியிருக்கிறான் உனக்குத் தெரியாது மகனே. இந்த ஊர் மக்களெல்லாம் அழுதார்கள். அவனை அவர்கள் பார்த்தபோது ........ கை காட்டியபடி ஊருக்குச் சொல்லிக்கொண்டே போய்விட்டான் தம்பி..."

அறுந்து உக்கிப்போய்க் கிடக்கும் செக்குக் கயிறு அவன் தன் வாழ்க்கைக்காக சுற்றிய வட்டம் அழிந்து போனதை நினைவூட்ட அங்கு அந்த நிலவொளியில் ஏக்கத்தோடு பார்த்தபடி ஆறுமுகத்தார் நின்றுகொண்டிருந்தார்.

வேப்பமரக்காற்று அவன் பெயர் உச்சரித்து புழுதி மணலை அள்ளிச் சென்று செக்காலையில் போட்டது. அவனது நினைவு நாளான அன்றைய தினத்தில் ஆறுமுகத்தார் செக்காலையில் ஓரத்தே பூத்திருந்த செவ்வரத்தைப் பூவைப் பறித்து செக்கடியில் வைத்துகண்ணீரால் அஞ்சலித்து நின்றார்.

"இண்டைக்குத் தான் தம்பி அவன் இந்த மண்ணுக்கு உரமாய் போன நாள்"

அந்த வாசன் இந்த ஊருக்குள்ளேயே சுற்றிக்கொண்டிருக்கிறான். அவன் உழைப்பு, அவன் உச்சரித்தவை, அவன் மண்மேல் கொண்டதொரு நேயம், அவன் உள் நின்றதோர் உணர்வு யுகங்களைக் கடந்தும் கேட்கும் அவனது ராகங்களைப் போல.

தன் தாய்த் தேசத்தின் சுதந்திர நல்வாழ்விற்காய் தன் பொருள் தன் உடல் அத்தனையையும் ஈய்ந்துவிட்ட ஒரு புதிய பரம்பரைக்காரனின் கதை கேட்டு நீதி மனம், காயம் எல்லாம் மண்ணில் தோய நின்றான் ●

## உங்களின் கவனத்திற்கு ...

கருத்தோட்டமுள்ள, ஆரோக்கியமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

"கேள்வி பதில்" பகுதிக்கான கேள்விகள் மாதத்தின் நடுப்பகுதிக்குமுன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

"எரிமலை" இதழ் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

* உங்கள் பத்திரிகையை நெறிப்படுத்த வேண்டிய கடமை உங்களதே. *

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# விதியை நொந்திடல் அல்லோம்.

வானமும் பூமியும் சேர்ந்து
நூல் நூர்த்தன;
ஆடையின்றிப் போன எம் - தேச
வயல் வெளிகளுக்காய்.

காற்று வெளியிடை,
மரத்தடி நிழலில்,
ஆற்றங் கரைகளில்
ஏக்கம் சுமந்த
எங்களின் அழுகுரல்!
இருண்ட உலகின் செவிகளுக்கு
கேளாது போயிற்று.

இடி விழுந்து,
கந்தகக் குண்டு பொழிந்து,
இனவெறிப் புயலடித்து,
வறண்டது எம் பூமி.

நீள வழித்துணையென
நடந்தவன்
வீதியில் ஒரு வேலியில்
குண்டு தாக்கி தொங்கிப் போயினன்.

அழுத மனங்களின்
காயத்தை மேலும்
உழுது, உழுது, எத்தனை 'செயின்
பிளக்குகள்' எங்கள் தெருக்களில்.

பல நூற்றுண்டாய்
வருவோர்; போவோர்
காலிலும் கீழாய்
கருதியே போயினர்,

இனியும்;
எனது கண்கள் அழுவதற்கும்,
எனது கைகள் கூப்புதற்கும்,
எனது குரல் அபயம் என்றிடவும்,
முடியாது காண்!

விதியை நொந்திடல் அல்லோம்;
வேங்கையாய் எழுவதே, வாழ்வாய்
ஆவோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இந்தியப்படையால் அநாதைகளாக்கப்பட்டு அன்புக்கு ஏங்கித் தவிக்கும் சிறார்கள்.

வி.என்.எஸ் உதயசந்திரன்

*தமிழீழப் பத்திரிகை ஒன்றிலிருந்து இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.*

"எ... எ... எனக்கு.. என்ட.. அம்மா வேணும்... எனக்கு... அம்மா வேணும்... என்ட... அம்மா... வேணும் எனக்கு.. அம்மா... அம்மா"
ஒரு சின்னப் பூவொன்று சொல்லியழுது கொண்டிருந்தது...
"இந்தியன் ஆமி அம்மாவைச் சுட்டது... செயின்பிளக் காலை... அப்பாவை நசிச்சது.."
பிள்ளை நிலாவொன்று தன் வேதனைகளை முழங்கத் தெரியாமல் தன் மழலையில் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

ஏக்கம் படர்ந்த கண்களும்... பாசத்திற்குத் துடிக்கும் உள்ளமுமாய் பார்ப்பவர்களை... "ஐயோ பாவம்"... என நினைக்க வைக்கும்.. இந்தச் சின்னக் குருத்துக்களின் சோகங்களை எழுதும்போது பேனாக்களின் வாய்கள் கூடப் பொறுக்கமுடியாமல் புலம்புகின்றன... பட்டுவண்ணக் கன்னத்தில் திட்டுத் திட்டாய் பாதை போட்டிருக்கும் கண்ணீரைக்கூட துடைக்கத் தெரியாமல்... சதா அம்மாவுக்காய் அழும் ஒன்பது வயது.... அமுதினி.

சாமியிடம் போன அம்மாவும் அப்பாவும்... எப்போ வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் வானத்தையே கழுத்தும் கண்களும் வலிக்க வலிக்க அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் ஆறு வயது ஐங்கரன்.

ஆசையாக தோளில் தூக்கி விளையாடும்.... அப்பாவை... யாரோவெல்லாம் பெட்டிக்குள் போட்டு மூடி தூக்கிச் சென்றது... ஏன்.. என்னத்திற்கு என்று தெரியாமல்.... இன்னும் அந்த நினைப்பில்... அடிக்கடி சூனியத்தை வெறிக்கும்... சுரேஷ்.

மாமரத்தில் கட்டிய ஊஞ்சலில் தன்னை மடியில் வைத்தாடி சோறு தீத்தும் அம்மா ஒரு நாள் செத்துப்போனதை உணராமல்... இன்னமும்... சாப்பிடப் பிடிக்காமல் அடம் பிடிக்கும்... அந்த மதுரா...

இப்படி.... இப்படி... எத்தனை.. அநாதை மழலைகள்... மனதிற்குள் இருக்கும் ஏக்கங்களையும்.. பாசங்களையும் வெளியே சொல்லத் தெரியாமல் தமக்குள் - தமது பாஷையில் சொல்லிப் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.



இவர்களை, இந்த அரும்புகளை... இருகரம் நீட்டி... அணைத்து வைத்திருக்கிறது அந்த அன்பு இல்லம்... அந்தக் குருத்து இதயங்களில் குரூரமாக விதிபோட்ட சூட்டுக் காயங்களை.. மெல்ல... மெல்ல.. சுகமாக்கி வருகின்றது அந்த ஞானசம்பந்தர் இல்லம். வேதனைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த குழந்தைகளை, "வாருங்கள்... அடைக்கலம் நானே." என அழைத்து அரவணைத்து வைத்திருக்கும் அந்த சிறுவர் இல்லத்துக்குள் நாங்கள் அடியெடுத்து வைத்த போது....

அந்த இல்லம் மழலைப் பூந்தோட்டமாய் மணத்தது... பெற்றோர்களின் அன்பான அரவணைப்புகளிலும், அந்தப் பாதுகாப்பான சூழ்நிலையிலும் பிறந்த அந்தச் சின்ன உயிர்கள் திக்கற்றவர்களாய் தெருத்தெருவாய் அலைந்து திரியாமல் இந்த ஞானசம்பந்தர் இல்லத்தின் பாதுகாப்பில் தங்கள் எதிர்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

"சோதனை தீரவில்லை... சொல்லி அழ யாருமில்ல... முன்ன பின்ன அழுததில்ல சொல்லித்தர ஆளும் இல்ல..." இரு சிறுவர்கள் இப்பாடலை ராகத்தோடு பாடிக்கொண்டிருந்தனர்...

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நாம் அச்சிறுவர்களுக்கு அருகே செல்ல, "சொல்லுங்க... சொல்லுங்க அழுத்திச் சொல்லுங்க..." என்று பாடலைத் தொடர்ந்தனர்.

இப்பாடலை கேட்ட எமக்கு இச் சிறுவர்கள் இப்பாடல் ஊடாகவே வேதனையை வெளிப்படுத்துகின்றார்களோ... என்ற எண்ணம் மேலெழுந்தது.

சைவத் தமிழ் பாரம்பரியத்தைப் பேணுகின்ற ஞான சம்பந்தர் இல்லத்திலே இந்திய அமைதிப் படையால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையரை இழந்த முப்பத்தேழு சிறு பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றார்கள்.

ஞானசம்பந்தர் இல்லம், அநாதரவாக்கப்பட்ட இப் பிள்ளைகளை மிகவும் அன்போடு பராமரித்து வருகின்றது. தாய் தந்தையரின் அரவணைப்பில் வாழவேண்டிய இந்தப் பிள்ளைகள் அவர்களின் அரவணைப்பின்றி பாசத்திற்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமுதினி (9 வயது), ஐங்கரன் (6 வயது) இருவரும் தாய் தந்தையரை இழந்தவர்கள். அக்காவும் தம்பியும் தங்கள் குடும்பத்திற்கு நேர்ந்த சோகக் கதையைச் சொல்லத் தொடங்கினார்கள்.

"எல்லாருக்கும்... சரியான அழுகை வந்திட்டுது... அப்ப நாங்கள் அழ... அந்த ஆமிக்காரங்கள்... துவக்காலை... சுடுகிறமாதிரி வந்து ஏசிச்சினம்."

"எங்களை மட்டுமல்ல... கனபேரையும் இப்படிக் கூட்டிக் கொண்டு வந்திச்சினம்..."

"அப்பதான்... எங்கட... அப்பாவைப் பிடிச்சுக் கொண்டுபோய்... றோட்டில படுக்கவைச்சு... செயின் புளொக்கால நெரிக்கப்பாத்திச்சினம்."

"அப்ப நாங்கள் எல்லோரும் சேர்ந்து குழறினம்... எல்லோரும் சேர்ந்து அழுதாப்பிறகு... ஒரு தமிழ் ஆமி அப்பாவை விடுவிச்சுப் போட்டு பிறகும் ஒருக்கா மண்ணில படுக்க வைச்சினம்."

"அப்ப... அப்ப... சரியான.... துவக்குச் சத்தம்... கேட்டுது. துவக்கு வெடிதான்... கொஞ்ச நேரத்துக்கு எங்களுக்கு ஒண்டும் தெரியேல்ல."

"நாங்கள் நினைச்சம்... எல்லோரும் செத்துப் போச்சினம் எண்டு. அந்தப் பக்கத்தில நிண்ட தம்பியின்ர காலில துவக்கு வெடிபட்டு... இரத்தம் வழிஞ்சுகொண்டிருந்தது."

*ஆசையாக தோளில் தூக்கி விளையாடும்.... அப்பாவை... யாரோவெல்லாம் பெட்டிக்குள் போட்டு மூடி தூக்கிச் சென்றது... ஏன்.. என்னத்திற்கு என்று தெரியாமல்... இன்னும் அந்த நினைப்பில்... அடிக்கடி சூனியத்தை வெறிக்கும்... சுரேஷ்.*

"அண்டைக்குப் பின்னேரம்... நாங்கள் எல்லோரும் வீட்டுக்குள்ள இருக்கேக்க... யாரோ... ஓடி வாற சத்தம் கேட்டது. சாப்பிட்டுக் கொண்டிருந்த நாங்கள் வேலிக்கிள்ளால எட்டிப் பார்த்தம்..... அப்ப நிறைய ஆமிக்காரங்கள்... துவக்குகளோட சுடப்போற மாதிரி... வீட்டைச் சுத்தி நிண்டிச்சினம்.

அப்ப... அந்தச் செயின் புளொக் வந்தது.... எங்களுக்கு செயின் புளொக் எண்டால் புழுத்தபயம். ... அப்ப... அப்ப...

அவர்கள் கூறிக்கொண்டிருக்கும்போதே அந்தக் கடந்த நாளின் பயங்கரங்கள் மீண்டும் அவர்கள் கண்முன் வந்திருக்கவேண்டும். கள்ளமில்லாத கண்களில் பயமும், பீதியும் முன்னறிவித்தல் இல்லாமல் வந்து இடம்பிடித்துக் கொண்டன.

"அப்ப ஆமிக்காரங்கள்... எங்களை வெளியிலே வரச் சொன்னாங்கள்... பிறகு... எல்லாரையும் மண்ணுக்க படுக்கச் சொல்லி ஏசினவை."

அமுதினியும், ஐங்கரனும்... மாறி, மாறி தங்கள் அனுபவங்களைக் கூறிக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டுவந்தது. எங்கள் இதயங்களும் வேதனையில் துடித்துக் கொண்டன.

"பிறகு... கொஞ்ச நேரத்தால வெடிச்சத்தம் நிண்டிட்டுது. அம்மாவும் அப்பாவும் எங்கை எண்டுபாத்தா இரண்டு பேரும்... துவக்கால ஆமி சுட்டு செத்துப் போச்சினம் போல கிடந்திச்சினம்... சரியான ரத்தமா கிடந்திச்சு. அதுக்குப் பிறகு அவையள் எழும்பவே இல்ல. நாங்கள் குளறினோம் ...ம்..கும்... ம்கும்... எங்கட அம்மாவும் அப்பாவும் எங்கள விட்டுட்டுச் செத்துப்போச்சினம்..."

அமுதினி சொல்லிக்கொண்டே அழுதாள்... "இல்ல அம்மாவும்... அப்பாவும் சாகேல்ல... அவையள் சாமிட்ட போட்டினம்...வருவினம்... வருவினம்..." அந்த ஐங்கரனுக்குத்தான் எத்தனை நம்பிக்கை... புரியாத வயது... கள்ளமில்லாத மனது... இவர்களுக்கு இந்தக் கதியா?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எங்கள்... மனதும்... உடைந்துபோய்... துடித்தது.

அன்னையின் அன்புடன்... தந்தையின் அரவணைப் புடன்... வாழவேண்டிய வயதில்... அநாதைகள் என்ற பெயரில் இந்த இல்லத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் இவர்களுக்குள்... இப்படி எத்தனை... கதை... அதில் இன்னொன்று... அவள் ஒரு சிறுமி. கண்களில் நீர் கசிய... நின்றிருந்த அவளிடம்...

"தங்கச்சி நீ ஏன் அழுகிறாய்?" என்று கேட்க, "நெடுங் கேணியில் தான் எங்கட வீடு இருக்கின்றது... அண் டைக்கு வெள்ளிக் கிழமை. அப்பா தேங்காயும் கற்பூ ரமும் வாங்க கடைக்குப் போனார்... "

"போனவர் வீட்டை திரும்பி வரேல்ல... இந்திய ஆமின்ர செல்லால... அப்பா வழியில... செத்திட் டார்... நான்.. இப்ப... அனாதையாயிட்டன்..." என் றாள் அச்சிறுமி.

"இங்க வந்திருக்கிற பிள்ளைகளை எந்தக்குறையும் இல்லாமல், நாங்கள் கவனிச்சுக் கொண்டுவருகிறம்... எண்டாலும் சொந்தத் தாய் தேப்பனோட வாழுற மாதிரி வருமே..."

"இங்க இருக்கிற குழந்தைகளில் எட்டுப்பேருக்கு தாயும் தகப்பனும் இல்ல. மற்றவையளுக்கு தகப்பன் மார் இல்ல."

"சில தாய்மார்... தங்கட பிள்ளையள பராமரிக்கக் கஷ்டப்பட்டு இங்க கொண்டு வந்து சேர்த்திருக்கினம். ஏதோ கடவுளின் புண்ணியத்தால்... இவையள நல் லமாதிரி கவனிச்சுக் கொண்டு வாறம்...இனியும் கடவுள் தான் எல்லோருக்கும் .... துணையாக இருக்க வேண்டும்...."

"பிறகு... கொஞ்ச நேரத்தால வெடிச்சத்தம் நிண்டிட்டுது. அம்மாவும் அப்பாவும் எங்கை எண்டுபாத்தா இரண்டு பேரும்..... துவக்கால ஆமி சுட்டு செத்துப் போச்சினம் போல கிடந்திச் சினம்... சரியான ரத்தமா கிடந்திச்சு. அதுக்குப் பிறகு அவையள் எழும்பவே இல்ல. நாங்கள் குளறினோம் ...ம்..கும்... ம்கும்... எங்கட அம்மாவும் அப்பாவும் எங்கள விட்டுட்டுச் செத்துப் போச்சினம்..."

"அப்பா இருந்தா... நான் இஞ்ச இருப்பனா...?" விம்மி விம்மி அழுதவாறு, "நானும் பெரிய ஆளா வந்து அப்பாவைக் கொண்ட ஆமிக்காரனை சுடாமல் விடமாட்டன்..." என்று கூறி மீண்டும் விம்மி அழ லானாள். அவள் அழுவதைப் பார்த்து சிறுவர்கள் எல்லோரும் அழலாயினர்.

இந்திய அமைதிப்படையால் பாதிக்கப்பட்ட சிறுவர் கள்தான் இந்த இல்லத்தில் இருக்கின்றார்கள். அமை திப்படையின் கொடுமைகள் அவர்கள் மனதை வெகுவாகப் பாதித்துவிட்டதை எம்மால் உணர முடிந்தது.

ஆமி என்ற சொல்லைக் கேட்டதும் அவர்களது முகம் விகாரமாக மாறிவிடுகின்றது.

இந்த ஞானசம்பந்தர் இல்லத்திலே பதினாறு சிறுமி களும் இருபத்தியொரு சிறுவர்களும் இருக்கின்றார் கள். இவர்கள் அனைவரும் தங்களுக்குள் ஒற்றுமை யாகக் கலந்துரையாடி வாழ்வதனைக் காணமுடிகி றது. செல்வி மணிமேகலை அவர்கள் தாயாக இருந்து பிள்ளைகளை அன்போடு பராமரித்து வருகின்றார். தாயன்பு ஈடுஇணையற்றது. இன்னொருவரால் அத் தாயின் அன்பை வழங்க முடியாது. தாயன்பை இழந் துநிற்கும் இந்தச் சின்னஞ்சிறார்களுக்கு தன்னால் முடிந்தளவு தாயன்பை வாரி வழங்கி அவர்களின் குறையினை ஓரளவிற்காவது தீர்த்து வருபவர் அவர்.

எம்மைக் கண்டு எமது கேள்விகளால் தமது கடந்து போன வேதனை நினைவுகளை மீட்டி அழுத கண் ணீரோடு நின்ற அவர்களை மகிழ்ச்சிப் படுத்துவதற் காக, "உங்களில் யாராவது பாடுவீர்களா? எங்கே எங்களுக்கு யாராவது ஒரு ஆள் பாடி ஆடிக் காட் டுங்கள்...." என்று கேட்க ஒரு சிறுவன் பாடுவதற்கு முன்வந்தான்.

அச்சிறுவன்..."சோதனை தீரவில்ல சொல்லியழ யாருமில்ல..." என்ற பாட்டைப் பாட ஏனைய சிறுவர் கள் " சொல்லுங்க சொல்லுங்க அழுத்திச் சொல் லுங்க" என்று தொடர்ந்தனர்.

நாம் அவர்களை சோகநிலையில் இருந்து மீட்டு பழைய நிலைக்குக் கொண்டுவர முயன்ற போதும் அவர்கள் தம்மையறியாமலே இப்பாடலைப் பாடத் தொடங்கியது எமக்கு எம் இதயத்தை ஊசியால் குத்துவது போல் இருந்தது. அவர்கள் இப்பாடலை விரும்பி ரசித்து தினமும் பாடுவார்களாம்.... இதன் அர்த்தம் சிறார்களுக்குக் கூட புரிந்து விட்டது.

தங்கள் சோகத்தின் வேதனைகளை இப்பாடல் வாயிலாகக் காட்டுகின்றார்களா? நாம் பெரியவர்க ளாக வளர்ந்து விட்ட நிலையிலும் தாய் தந்தையரைப் பிரிந்து வாழ்வதென்றால் முடியாத காரியமாக இருக் கிறது.

இந்த சிறுவர்கள் எப்படிப் பிரிந்து வாழ்கிறார்கள்...

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



புதியதொரு சூழலில் எப்படி வாழ முடிகிறது ?

எப்படித்தான் அன்பு பாசம் கிடைத்தாலும் அது தாய் தந்தையரின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஈடா குமா? இன்று ஞானசம்பந்தர் இல்லத்தில் அநாதை களாக இருக்கும் சிறுவர் சிறுமிகளைப் பாருங்கள். உலகம் புரியாத வயதில் அவர்கள் அநாதைகளாகி விட்டார்கள். அவர்கள் பெரியவர்களாக வருகின்ற பொழுது.... சற்று சிந்தித்துப் பாருங்கள்.

1989 ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட இவ் வில்லத்திற்கு மாதம் முப்பதாயிரம் ரூபா செலவாகி றது.

புனர் வாழ்வு நிலையம் இச்செலவில் மூன்றில் ஒரு பங்கினைக் கொடுக்கிறது. மிகுதிப்பணம் நன்கொ டைகளின் மூலமே பெறப்படுகின்றது. இச்சிறுவர் சிறுமிகளைப் பராமரிப்பதில் செலவுகள் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன.

பொதுமக்கள் இவ்வில்லத்திற்கு உதவ முன் வருவார் களேயானால் அநாதைச் சிறுவர்களின் வாழ்வைச் சிறப்பாக்க முடியும். ஆனால் எம்மினத்தவர்கள் ஆடம்பரச் செலவிற்கே பணத்தைச் செலவிடுகின்ற னர்.

பிறந்தநாள் விழாவென்றால் பெருமளவு, திருமணம் என்றால் அது காணிவேல் விழா போன்று நடை பெறுகின்றது. கோவிற் திருவிழாக்கள் என்றால், ஏட்டிக்குப் போட்டியாகச் செலவு.

இதனால் என்ன பலன்.... பணம் தானே கரியாகிறது. இவ்வாறு செலவிடுகின்ற பணத்தை இப்படியான அநாதைச் சிறுவர்களின் பராமரிப்பிற்குக் கொடுத்து உதவினால் என்ன?

ஏன் அந்த மனநிலை எமக்கு வருவதற்குத் தயக்கம் காட்டுகிறது.....?

நாம் வாழ்ந்தால் சரியென்று சிந்திக்காமல் மற்றவர் களும் வாழவேண்டுமென்று சிந்திப்பதில் என்ன தவறு?

எங்கள் தமிழீழத்தில் அநாதைகள், ஊனமுற்றவர்கள், மனநோயாளர்கள் தோன்றி விட்டார்கள்.

இதற்குக் காரணம் யார் இராணுவமே; இராணுவக் கொடுமைகள் தந்த பரிசுகளே இவை...... இன்று நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம், நாளை எமக்கு என்ன நடக்கும் என்று சொல்லமுடியாது. எனவே பாதிக்கப் பட்டவர்களின் மறுவாழ்விற்கு தயவு செய்து உதவிக் கரம் நீட்டுங்கள்.

இதுவே சமுதாயத்திற்கு நாம் செய்யும் மிகப் பெரிய கடமையாகும் ●

தமிழீழத்தில், எமது மக்கள் அனுபவிக்கின்ற துன்பங்கள், துயரங்கள், கொடுமையான வாழ்க்கை நிலைகள் பற்றிய உணர்வுபூர்வமான ஓவியங்கள், நவீன ஓவியங்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள அனுபவமுள்ள, எமது மண்ணின் கலைஞர்களின் உயிர்த்துடிப்புள்ள ஓவிய வெளிப்பாடுகளை எதிர்பார்க்கின்றோம்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
பிரான்சுக் கிளை
M.F. சேவியர்
188, RUE ORDENER
75018 PARIS.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அவர்களது சிறிய, உலர்ந்த வயிறுகளைப்போல்;
அவர்களது எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கைகளும்
வெறுமையாய் நீண்டு கிடக்கின்றன.

எங்கள் கண்ணுக்கெட்டாத பிரதேசங்களில்,
எங்கள் செவிகட்கு எட்டாத விசும்பல்களில்,
எங்கள் கற்பனைக்குக் கட்டுப்படாத உண்மைகளில்
அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கோடைக் காலத் தாகத்துடன்,
கால மாற்றத்திற்காய் அவர்கள் காத்திருக்கின்றார்கள்;
நேசக்கரமேதும் தம்மைப் பாசமுடன் அணைக்குமென்று !

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பெண்களைப் பழித்த
கொடியவர் முன் பெண்ணின்
பெருமையை நிலை நாட்டினாய்!- எங்கள்
மண்ணை அழித்த
பகைவனை அழித்து நீ
மங்கையர் திறம் காட்டினாய்!



குழந்தைப் பருவத்தில்
கண்முன்னே அழகுக்
கொடியாய் நீ வளர்ந்தாயம்மா!- இன்று
எழுந்தாய் ! தமிழரின்
எதிரிகள் தலையில்
இடியாய் நீ விழுந்தாயம்மா!

www.tamileelamarchive.com